பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 18 வெள்ளிக்கிழமை (02-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:95

## ஸ்ரீ.ல.சு.கட்சி செய்வது போன்று சமாதான தீபம் ஏந்தி

# யாழ்ப்பாணம் - கொழும்பு பாதயாத்திரை

# அனுமதி கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்!

## மகேஸ்வரன் எம்.பி. முயற்சி

## கண்டி வீதி வழியாக நடத்தத் திட்டம்

கொழும்பு,மார்ச்2



**பல்வேறு இடங்களில் இருந்தும் சமாதான தீபங்களை ஏந்திய படி கொழும்பை நோக்கி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது நடத்தும் பாதயாத்திரையைப் போன்று -**

**யாழ்ப்பாணத்தில் இருந்தும் கண்டி வீதி வழியே கொழும்புக்கும் சமாதான தீபங்களை ஏந்தியபடி பாதயாத்திரை நடத்துவதற்கு அனுமதிக்கும்படி யாழ்.மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஜனாதிபதியைக் கோரியிருக்கின்றார்.**

இது தொடர்பாக அவர் நேற்று ஜனாதிபதிக்கு 'பக்ஸ்' மூலம் அனுபிவைத்த கடிதத்தில் தெரிவிககப்பட்டிருப்பதாவது:-

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டின் போது கையளிப்பதற்காக மாத்தறை, கண்டி, வவுனியா, அநுராதபுரம் போன்ற இடங்களிலிருந்து சமாதான தீபங்கள் புறப்பட்டு பாதயாத்திரையாகக் கொழும்பு நோக்கி வந்துகொண்டிருக்கின்றன.

அதேபோன்று கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் நூற்றுக்கு நூறு சமாதானத்தை விரும்பும் யாழ்ப்பாண மக்களிடமிருந்துதான் முதலில் சமாதான தீபங்கள் எடுத்துவரப்பட வேண்டும்.

எனவே யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து ஆரம்பித்து, 'ஏ 9' கண்டி வீதி வழியாக இரு சமாதான தீபங்களைப் பாதயாத்திரையாக எடுத்து வந்து சிங்கள - தமிழ் புத்தாண்டு தினத்தில் கொழும்பில் தங்களிடமும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடமும் நேரில் கையளித்து, சமாதானத்தின் மீது

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை விவகாரம்

## பிரிட்டனுக்கு நன்றி கூற கதிர்காமர் அங்கு செல்வார்

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதற்கான சிபாரிசு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து பிரிட்டிஷ் அரசுக்கு நன்றி தெரிவிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அடுத்த வாரம் லண்டன் செல்லவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.

இந்த விஜயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றையும் விடுத்தது.

தற்போது சவுதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் இந்த வார இறுதிக்குள் கொழும்பு திரும்பி மீண்டும் லண்டன் பயணமாவார் என்றும் -

அங்கு பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவார் என்றும் -

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## பிரதமர், அமைச்சர்கள் வரவேற்பு

கொழும்பு,மார்ச்2

விடுதலைப் புலிகள் அமைப்பைத தடைசெய்வதற்கு பிரிட்டன் எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்று பிரதமர் மற்றும் அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

பிரிட்டன் எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்கிறோம். இதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க வழி பிறந்துள்ளது. அத்துடன் யுத்தத்தை தொடர இந்தத் தடை உதவும் - என்றார்.

தொடர்பு சாதனத்துறை அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகள் அமைப்பைப் பேச்சுக்குக் கொண்டுவர இது உதவுவதுடன் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள யுத்தத்தையும் நியாயப்படுத்தி உள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு ஆரம்பிக்கும் பேச்சுகளுக்கு சமுகமளிக்க வேண்டிய நெருக்குதலை புலிகள் எதிர்நோக்குவர் - என்றார்.

நகர வீடமைப்பு அமைச்சர் மங்கள சமரவீர, பிரிட்டனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் புலிகளைத் தடை செய்ய வாய்ப்புக் கிடைத்துள்ளது - என்றார். (உ-3)

## பிரிட்டனின் தடை முயற்சி நடவடிக்கை புலிகளை பேச்சு மேசைக்கு வரவைக்கும்

### தூதுவர் மங்கள முனசிங்க நம்பிக்கை

லண்டன்,மார்ச்2

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை அந்த அமைப்பை பேச்சு மேசைக்கு வரவைக்கும் ஒரு செயற்பாடாக அமையலாம் என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தொலைக்காட்சிச் சேவையில் 'ஏசியா ருடே' நிகழ்ச்சிக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

பிரிட்டன் அரசின் முடிவை நாம் வரவேற்கின்றோம். பிரிட்டனின் இந்த நடவடிக்கையை இலங்கையில் உள்ளோர் மட்டுமன்றி சமாதானம் விரும்பும் எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பிரிட்டனின் இந்த நடவடிக்கை விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு வரவைக்கும் ஒரு செயற்பாடாக அமையலாம்.

1991இல் ராஜீவ்காந்தி கொலை மற்றும் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரது படுகொலைகளுக்கும் காரணமான விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டே பிரிட்டன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என நம்புகிறேன்.

இலங்கையில் நடைபெறும் போரையும் அது தொடர்ந்து உருவாக்கும் இரத்தக் களரியையும் எமது அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வர முழு முயற்சி எடுக்கும் - என்றார். (உ-3)

## இந்தியாவும் வரவேற்கிறது

புதுடில்லி,மார்ச்2

பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளிட்ட 21 அமைப்புக்கள் தடைசெய்யப்படுவதற்கு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் செய்யப்பட்ட சிபாரிசை வரவேற்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய அரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தச் சிபாரிசு நாடுகளுக்கிடையில் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட்டங்கள் வலுவடைவதற்கு வழிசெய்யும்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் விடுதலைப் புலிகள் இயக்கம் பிரிட்டனின் பயங்கரவாத அமைப்புக்களில் இடம்பெற்றதை இந்தியா என்றும் வரவேற்கிறது - என்றுள்ளது. (உ-7)

## பிரிட்டிஷ் தடை குறித்து இலங்கை பெருமை கொள்ளத் தேவையில்லை

### ஐ.தே.கட்சி அறிக்கை

கொழும்பு,மார்ச்2

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதை வரவேற்றுள்ள ஐ.தே.கட்சி, இதையிட்டு இலங்கை அரசு பெருமை கொள்ளத் தேவையில்லை என்று கூறியுள்ளது.

பிரிட்டனின் தடை தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1992 ஆம் ஆண்டு எமது கட்சி ஆட்சியில் இருந்த சமயம் எமது கோரிக்கையின் பேரில் அமெரிக்கா விடுதலைப் புலிகளைத் தடைசெய்தது.

ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்திய ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் போன்ற அமைப்புக்களை ஜனநாயக வழிக்குக் கொண்டு வந்தது எமது கட்சிதான்.

விடுதலைப் புலிகள் மட்டுமே தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். அந்த அமைப்பை பிரிட்டன் சாதாரண சட்டத்தின் கீழ் தடை செய்துள்ளது. அதையிட்டு இலங்கை அரசு பெருமை கொள்ளத் தேவையில்லை.

யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியதுதான் இன்றுள்ள முக்கிய தேவையாகும்.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்திலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன -

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-7)

## இயக்கச்சியில் ஜெட் தாக்குதல்!

கொழும்பு,மார்ச்2

ஆனையிறவுக்கு வடக்கே இயகச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் மீது நேற்றுக் காலை 6.30 மணியளவில் விமானப் படையின் ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று விசேட ஊடகத தகவல் நிலையம் தெரிவித்தது.

எட்டுக் கட்டடங்களுடன் அமைந்திருந்த இந்த முகாம் முற்றாக அழிககப்பட்டது என்று விமானி உறுதி செய்துள்ளார் என்றும் -

இந்தத் தாக்குதலால் விடுதலைப் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் - தகவல் நிலையம் தெரிவித்தது.

கைதடிப் பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்ட படையினர் ஆறு 60எம்.எம். மோட்டார்க்குண்டுகளையும் ஒரு கிரனேட்டையும் மீட்டுச செயலிழக்கச் செய்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.(உ-15)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## E.S.பேரம்பலம் நிறுவன ஆதரவில்

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும்
22 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட
இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கலும்

காலம்: நாளை (03-03-2001) சனிக்கிழமை மாலை 4.30 மணி.
இடம்: துரையப்பா விளையாட்டரங்கு

**பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்**
**எதிர் அரியாலை ஐக்கிய கழகம்.**

பிரதம விருந்தினர்: திரு. C. இராசதுரை
(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)
கௌரவ விருந்தினர்: A.F.J.றாபசிங்கம்
(யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி)
சிறப்பு விருந்தினர்: திரு. E.S.P. நாகரட்ணம
(உரிமையாளர்,E.S.P.நிறுவனம்)

(84800) - யா.உ.லீக



## புலமைப்பரிசில் - 2001

29 ஆவது பரீட்சையில்
அதி கூடிய புள்ளி
பெற்றோர்

பே.கபில் - 179
(கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை)
ந.திருத்தணிகன்- 172
(யா.இ.ஆ.பாடசாலை)
உ.விஜித் - 170
(யா/மத்திய கல்லூரி)
ஆ.ஜதிகானந் - 167
வெ.ஜெயப்பிரசாந் - 166
(யா.இ.ஆ.பாடசாலை)

அடுத்த பரீட்சை ஞாயிறு

Bond யாழ்நகர்.

(84803)



## பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

கடந்த 21.02.2001 ஆம் திகதி மாநகரசபை நல்லூர்க் கிளை நூலகத்தில் சில பெறுமதிமிக்க நூல்கள் திருடப்பட்டுள்ளன.

இவை தொடர்பான தகவல்கள் தெரிந்தோர் நேரிலோ, கடித மூலமாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் 2275, 2744, 2019, 2020 ஆகியவற்றின் மூலமாகவோ தகவல் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திருடப்பட்ட நூல்கள் பழைய புத்தகக்கடைகளில் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவது சமூக விரோத செயலாகும்.

இவ்வாறு விற்பனை செய்யப்படுவது தொடர்பான தகவல்கள் தெரிந்தாலும், அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இராசா தணிகாசலம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(C/15514)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
01 - 07 - 1932

மறைவு
31 - 01 - 2001

### திருமதி சாமுவேல் பிலோமினம்மா

குடும்பத்தின் குல விளக்காய்த் திகழ்ந்து
பாசத்தின் பிறப்பிடமாக பிள்ளைக்கு நல் அன்னையாய்
அன்பின் உறைவிடமாய் உறவினருக்கு - அன்பு
வழிகாட்டியாகத் திகழ்ந்து இறைவன் அடி சேர்ந்து
மாதம் ஒன்று மறைந்தாலும் - அம்மா!
உன் பிரிவு மனத்தை வாட்டி வதைக்குதம்மா......

31-01-2001 அன்று இறைவனடி சேர்ந்த அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் கடித மூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் எமக்கு சகல விதத்திலும் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் -

இன்று (02-03-2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*புனித செபஸ்ரியார் வீதி,*
*மாகியம்பதி.*
(84783)


## தேவை

அனுபவமுள்ள (பிளேட்டிங்)
மெஷின் மைன்டர் தேவை.
நேரில் சமுகம் தரவும்

**அபிராமி அச்சகம்**
சம்பியன் லேன்,
(84791) கொக்குவில்.



## ராஜா யாழ்ப்பாணம்

இன்றுமுதல் குதூகல
ஆரம்பம்

**டைட்டானிக்**

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே)
(C/15311)



## லக்ஷ்மி இணுவில்

2ஆவது வாரமாக
அஜித், சிம்ரன் நடித்த
**உன்னைக்கொடு என்னைத் தருவேன்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00 2.30
(புதிய நேரம்)
(84797)



## நாகம்ஸ்
சுன்னாகம்

விஜயகாந்த்,
தேவயானி, வாசு,
கபாலி நடித்த (84790)

**வல்லரசு**
(ரீல்ஸ்)
காட்சிகள்:11.00, 230 (புதிய நேரம்)



## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்
**A/L - இணைந்த கணிதம்**

**ஆ.இரவீந்திரன் B.Sc.**

சனி, ஞாயிறு
✪ *அலகு ரீதியான வகுப்புக்கள்* ✪

| | |
|---|---|
| 10.00 - திரிகோணகணிதம் | 11.00 - நிலையியல் |
| 1.00 - தொகையீடு | 2 .00 - உராய்வு |
| 3.00 - புள்ளிவிவரவியல் | |

ஆரம்பம் - 03-03-2001
சனிக்கிழமை 10 மணி
(84798)



யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர்
மகா வித்தியாலயம்
இல்ல மெய்வல்லுநர் திறனாய்வும்
ஆரம்பக்கல்வி செயற்பாட்டறை

## திறப்பு விழாவும் - 2001

இடம்: வித்தியாலய விளையாட்டு மைதானம்
காலம்: இன்று (02-03-2001) வெள்ளிக்கிழமை மு.ப.10மணி
தலைவர்: திரு.ந.கலைநாதன் அவர்கள் (அதிபர்)

*பிரதம விருந்தினர்:-*
திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள்
(கல்விப்பணிப்பாளர் - தீவகக் கல்வி வலயம்)

*சிறப்பு விருந்தினர்கள்:-*
பேராசிரியர் வி.சிவசாமி அவர்கள்
(சமஸ்கிருதத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் கலாநிதி கா.குகபாலன் அவர்கள்
(புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.சோ.தில்லைநாதன் அவர்கள்
(கோட்டக்கல்வி அதிகாரி, வேலணைக் கல்விக்கோட்டம்)
திரு.நா.கருணாகரகுருமூர்த்தி அவர்கள்
(தலைவர், வேலணைப் பிரதேச சபை)
திரு.சி.செல்வரத்தினம் அவர்கள்
(உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி)
திரு.அ.கமலாகரன் அவர்கள்
(உதவிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(84793)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசிங்கம் மனோன்மணி

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் மனோன்மணி அவர்கள் 27.02.2001 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் (மொறட்டுவ வர்த்தகர்) அன்பு மனைவியும், பாலேந்திரன், பாலசுவேந்திரன், பாலசிரோன்மணி, பாலசதாமணி, பாலஸ்ரீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இடம்பெறும்.

*சரவணை கிழக்கு,*
*வேலணை.*
(84778)

தகவல்:
ஆ.குணரத்தினம்

### சின்னப்பு பொன்னுத்துரை

வடக்கு வீதி, மிருசுவிலைச் சேர்ந்த சின்னப்பு பொன்னுத்துரை அவர்கள நேற்றுமுன்தினம் (28.02.2001) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும், தம்பையா அவர்களின் மைத்துனரும், கணேச லிங்கம்(சவூதி அரேபியா), பத்மநாதன் (டோகா), சிவபாலசிங்கம், சரஸ்வதி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலர் (சவூதி அரேபியா), புஸ்பா (அமெரிக்கா), அன்ரனிற்றா ஜெயராணி, நடராசா (கொழும்பு), கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.03.2001) சனிக்கிழமை சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாயில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
*தேநீர்ப்புளியடி,*
*சண்டிலிப்பாய் மேற்கு,*
*சண்டிலிப்பாய்.*
(84802)

தகவல்:
க.கந்தசாமி
(மருமகன்)


## ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் ஒடியோ CD வெளியீடுகள்



(1) ஓம் ஸ்ரீ சாய்ராம் *(சின்னக்குயில் சித்ரா)*
(2) ஜெய் ஸ்ரீ சாய்பாபா *(மகாநதி ஷோபனா)*
(3) சத்யசாயி பஜனை *(கிருஷ்ணசந்தர், ராதிகா, பாலாஜி)*
(4) பஜன் சந்த்யா VOL I *(உஷா சேதுராமன், பாரெய்ன்)*
(5) பஜன் சந்த்யா VOL II *(உஷா சேதுராமன், பாரெய்ன்)*
(6) பஜன் சந்த்யா VOL III *(உஷா சேதுராமன், பாரெய்ன்)*
(7) சாயி சரணம் *(மலேசியா வாசுதேவன், B.S.சசிரேகா)*
(8) சாயி கீதாஞ்சலி *(P.சுசீலா)*
(9) இதயத்தின் குரல் VOL I *(ரவிராஜ் நேஸ்ரி)*
(10) இதயத்தின் குரல் VOL II *(ஹரிஹரன், இந்திரா)*
(11) இதயத்தின் குரல் VOL III *(ரவிராஜ் நேஸ்ரி, ஹரிஹரன், இந்திரா)*
(12) சாயி சாகரா II *(கல்யாணி சுந்தர்ராஜன்)*
(13) சாயி தரிசனம் *(மலேசியா வாசுதேவன்)*
(14) ஸ்ரீ பாத சரணம் *(லலிதா சாகரி, வாணிஜெயராம், விஜயலஷ்மிசர்மா)*
(15) சாயி சம்ருதி - 1 *(ராம் - லக்ஷ்மன்)*

இவை அனைத்தும் சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட - வேறு எங்கும் கிடைக்காத - எம்மிடம் மாத்திரமே உள்ள இவ் ஒடியோ CDக்களைச் சிறந்த முறையில் கசற்றில் பதிவு செய்து வர்ண முகப்புக் கவருடன் பெற்றுக்கொள்ள,

## "சுப்பலோ வீடியோ, ஓடியோ சென்ரர்"

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/15512)

உதயன்

## பிரிட்டனின் தடை

தமது நாட்டில் தடை செய்யப்பட வேண்டிய பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரையும் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் நீண்ட காலமாக வற்புறுத்தியது. தென்னிலங்கையின் தீவிரவாதப் போக்குடையவர்களும் சமீபகாலமாக இது விடயத்தில் அதித அக்கறை கொண்டு, புலிகளைத் தடை செய்ய வலியுறுத்தி வந்தன. இதற்கென கையெழுத்து வேட்டைகள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்றும் அவர்கள் நடத்தினார்கள்.

தமிழ் அரசியல் கட்சிகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்யக் கூடாதெனை வலியுறுத்தின. தமிழ் மக்களும் அவ்வாறே மகஜர்கள் மூலம் பிரிட்டிஷ் அரசிடம் வற்புறுத்தினர்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து —

இத்தடை விதிப்பைக் கொண்டு வருவது, பெரும் பாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என்ற அச்சம் சமாதான விரும்பிகளிடம் குடிகொண்டிருந்தது; இப்போதும் உள்ளது.

ஆனால் பிரிட்டன் தனக்கெனக் காரணங்களை வைத்துக் கொண்டோ என்னவோ — தனது நலன் கருதியோ என்னவோ — புலிகளைத் தடை செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீது தமது அரசு விதித்துள்ள தடையினால் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு எவ்வித இடையூறும், குந்தகமும் உண்டாக மாட்டாது என்பது பிரிட்டனின் நிலைப்பாடாக உள்ளது. கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் அந்தவாறே கருத்து வெளியிட்டுள்ளது.

என்னவாயினும், பிரிட்டனின் நடவடிக்கை தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது என்பதே உண்மை. இந் நடவடிக்கையினால் பேச்சு வார்த்தை மேசையில் பின்னடைவுகள் உண்டாகவும், தமிழர் தரப்பு உரத்த குரலில் தமது நிலைப்பாட்டை முன்வைக்க இயலாத நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் தடை அறிவிப்பின் பின்னரும் சமாதான முயற்சிகளைத் தொடரப் போவதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. பிரிட்டனின் தடையை ஓர் இழப்பாகக் கருதாமல் பேச்சு வார்த்தைக்கான முயற்சிகளை விடுதலைப் புலிகள் தொடர வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகவும் உள்ளது. அந்த வகையில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் மனமறிந்து, செயற்படுவதை அரசாங்கமும் பிரிட்டிஷ் போன்ற சர்வதேசத் தரப்புகளும் உன்னிப்பாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நடந்தவைகள் நடந்தவையாக இருக்கட்டும்; நடப்பவைகள் நல்லனவாக இருக்கட்டும் என்ற நன்னோக்க வாக்குக்கு ஏற்பச் செயற்படுவதற்கு அரசும் மனந்திருந்த வேண்டும்.

பிரிட்டனின் தடையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு பேச்சுவார்த்தை மேசையில் மேலோங்கி நிற்கவோ, கடுங்குரலில் பேசவோ நினைக்கலாகாது. தமிழர்களுக்கு உண்மையான நீதி வழங்கப்படவேண்டும் என்பதில் அதற்கு அக்கறை உண்டா என்பது இதிலிருந்து வெளிப்படும்!

# யாழ்.சிறைச்சாலை காவலர் பதவிக்கு இதுவரை 2 ஆயிரம் பேர் விண்ணப்பம்

## உடன் 50பேரை நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கான சிறைக்காவலர் பதவிகளுக்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருக்கின்றனர் என்று சிறைச்சாலைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். சிறைச்சாலையில் சிறைக் காவலர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் நோக்கத்துடன் சிறைச்சாலைத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

அதை அடுத்தே குடாநாட்டில் இருந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் சிறைச்சாலை திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதாக அறிய முடிகிறது

இதேவேளை—

யாழ். சிறைச்சாலையில் தற்போது 39 உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர் இந்தச் சிறைச் சாலையைச் சீராக இயங்கச் செய்வதற்கு மேலும் 50 உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் என்று யாழ். சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் உடனடியாக நடத்தி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். தற்போது குடாநாட்டில் மாவட்ட நீதிமன்றங்களும், மேல் நீதிமன்றமும் இயங்க ஆரம்பித்துள்ளன. இதனால் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு. அதற்கேற்றவாறு சிறைக் காவலர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது ஆகும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

(க-6)

## ஜி. சீ. ஈ. சாதாரண, உயர்தரப்

# பரீட்சைகளில் சித்திபெற்றோருக்கு புலமைப் பரிசில் வழங்க ஏற்பாடு

கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜி சீ ஈ சாதாரணதரப் பரீட்சை, ஜி.சீ ஈ உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்ற கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் வாழும் மாணவர்களுக்கு சங்கத்தினால் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அனைத்து மாணவர்களும், ஜி.சீ ஈ சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும், ஜி சீ ஈ உயர் தரப் பரீட்சையில் அதிஉயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்,

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்திற்கு பொது மக்கள், பொது அமைப்புகள், வர்த்தகர்கள் ஆகியோரிடமிருந்து இதுவரை ஒரு லட்சத்து 82 ஆயிரம் ரூபா நிதிசேர்ந்துள்ளதாகவும்—

சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புலமைப் பரிசில் திட்டத்தில் ஏற்கனவே சங்கப் பணியாளர்களின் பிள்ளைகள் 14 பேரும், வறுமை கோட்டின் கீழ் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மூவரும் மாதாந்தம் நிதிஉதவி பெற்று வருவதாகவும்—

இம்முறை சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும்—

சங்கத் தலைவர் த, சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

(ம-117)

# திருமறைக் கலாமன்றக் கலைஞர் நெடுந்தீவுக்கு கலைப் பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் குழுவினர் நெடுந்தீவில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு நாடகப் பயிற்சி வழங்குவதற்காகவும், 4 நாடகங்களை மேடையேற்றுவதற்காகவும் 3 நாள் கலைப்பயணமாக எதிர்வரும் 9 ஆம் திகதி நெடுந்தீவிற்குச் செல்லவுள்ளனர்.

பிரதேச சபைத்தலைவர் ஏ. டபிள்யு. அரியநாயகம் மற்றும் கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் ஆகியோரது விசேட அழைப்பை ஏற்று இந்தக் கலைப்பயணம் ஏற்பாடாகியுள்ளது.

ஜீவப்பிரயத்தனம் (நவீன நாடகம்), சோழன் மகன் (நாட்டுக் கூத்து), பூதத்தம்பி (இசை நாடகம்) மற்றும் கூடித்துயர் வெல் (சிறுவர் நாடகம்) ஆகிய நான்கு நாடகங்களே அங்கு மேடையேற்றப்படவுள்ளன.

நெடுந்தீவில் உள்ள இளம் கலைஞர்களின் திறமைகளை மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் நாடக பயிற்சி வகுப்புகளும் திருமறைக் கலாமன்ற நாடக கலைஞர்களால் நடத்தப்படவுள்ளன. (க-6)

# யாழ். மாணவர்கள் 45 பேர் தென்பகுதிக்குக் கல்விச் சுற்றுலா

## எதிர்வரும் 8 ஆம் திகதி பயணம்

யாழ்ப்பாணம், மார்ச். 2

யாழ். மாவட்டப் பாடசாலையைச் சேர்ந்த 45 மாணவர்கள் கல்விச்சுற்றுலாவுக்கென எதிர்வரும் 8 ஆம் திகதி தென்பகுதிக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்;

இதற்கென 5 கல்வி வலயங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 45மாணவ, மாணவிகளுடன் 5 ஆசிரியர்களும் செல்கின்றனர்.

இந்தக்கல்விச் சுற்றுலாவை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

சுற்றுலாவுக்குச் செல்லும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் 8 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு முன்னர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு மதிய உணவுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த சுற்றுலாவில கலந்து கொள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மேற்படி விடயங்கள் அடங்கிய கடிதங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(க-10-9)

## நாளை

மாசி 19

சனிக்கிழமை

திதி: அட்டமி

பிற்பகல் 2-56 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

நண்பகல் 12-00 வரை.

கச்சியப்பர் குருபூசை நாள்

சுபநேரம்: 3.27 — 4.57

ராகுகாலம்: 9 27—10.57

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நன்மையான வாழ்க்கையும் இன்பமான மரணமும் உண்மையான அருளாகும்

## மெய்வன்மைப் போட்டிகள்

குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும்

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-173)

★ ★ ★

அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் அதிபர் அருட்செல்வி மரியரொசாரியோ தலைமையில் நடைபெறும்.

யாழ் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-173)

★ ★ ★

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ மகேசு தலைமையில் நடைபெறும்.

வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க. பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் அடிகளார், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆசிரியர் மா. லோகசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

(ம-109)

★ ★ ★

வண்ணை நாவலர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் ந. சிவராசா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் நா.சிவபாதசுந்தரமும் சிறப்பு விருந்தினராக யாழ். கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆ இராஜகோபாலும் பங்குபற்றுவர். [3]

★ ★ ★

யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 2-45மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா, திருமதி சாந்தகுமாரி விக்னராஜா ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். [க-7]

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 2

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

கோண்டாவில் மத்தி வி.க எதிர் கோண்டாவில் கிழக்கு குமரன் வி க.

★ கல்வியங்காடு விநாயகர் வி.க. எதிர் பொற்பதி ஐக்கிய வி. க. (க-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தடகளப போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (க-86)

## பண்ணாகம் பல்லசுட்டியில்

# 4 குடிசைகள் எரிந்து நாசம்: பாதிப்புற்றோருக்கு நிவாரணம்

## பிரதேச சபை தலைவர் இன்று வழங்குவார்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பண்ணாகம் பல்லசுட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தற்செயலாகத் தீப்பிடித்து 4 குடிசைகள் தீக்கிரையாகின இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை வலி. மேற்கு பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து உடுபுடைவைகள், பாத்திரங்கள் போன்றவை வழங்கப்படும் என்று பிரதேச சபைத்தலைவர் என். திரிலோகநாதன் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்தில் 4 குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன இந்தக் குடும்பத்தவர்களின் உடைமைகள் அனைத்தும் தீக்கிரையாகிவிட்டன.

இது குறித்து பிரதேச சபைத் தலைவர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிவித்திருந்தார்.

அதைத்தொடர்ந்து அமைச்சரின் அவசர பணிப்புரையின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கஏற்பாடு செய்யப்பட்டதாக திரிலோகநாதன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிதாகக் கூரைத் தகடுகள் போடப்பட்டு வீடுகளைத் திருத்திக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதேச சபைத் தலைவரைப் பணித்துள்ளார்.

(க)

# சாவகச்சேரி நகரை மீள நிர்மாணிக்க ஜனாதிபதி நிதி ஒதுக்கீடு அவசியம்

## நகர சபைத் தலைவர் மகஜர்

தென்மராட்சி, மார்ச் 2

யுத்தத்தினால் அழிந்து நாசமாகி விட்ட சாவகச்சேரி நகரைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு விசேட செயல் திட்டம் உருவாக்க ஜனாதிபதியின் நிதியிலிருந்து பிரத்தியேகமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

நகரப் பகுதியைப் புனரமைக்க பல மில்லியன் ரூபா தேவைப்படுமாதலால் ஏனைய அபிவிருத்தித் திட்ட ஒதுக்கீடுகள் மூலம் செய்து முடிக்க இயலாது அதனால் ஜனாதிபதியே விசேட நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபைத் தலைவர் பெனடிக் தனபாலசிங்கம் 'பக்ஸ்' மூலம் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளார்.

நகரப் பகுதியில் உள்ள அரச திணைக்களங்கள் மட்டுமல்ல பொதுமக்களின் இருப்பிடங்களும் வணக்கத்தலங்கள், பாடசாலைகள் அனைத்தும் அழிந்துவிட்டன. இவற்றைப் புனரமைப்பதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டுமெனவும் மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, அ விநாயகமூர்த்தி, தி மகேஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (க-117)

## பஸ்ஸால் தவறிவீழ்ந்து மாணவிகள் இருவர் காயம்

நெல்லியடி, மார்ச் 2

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் இருந்து தவறிவீழ்ந்து பாடசாலை மாணவிகள் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் தம்பசிட்டிசந்திக்கு அருகில் இடம்பெற்றது.

தொண்டமானாறில் இருந்து பருத்தித்துறைவரை பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்ஸில் பயணம் செய்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவியான சின்னத்துரை சிந்தஜா (வயது 15), வட இந்துக்கல்லூரி மாணவியான ஏரம்பு சுதா (வயது 15) ஆகிய இருவருமே தலையில் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-109)


### யாழ். கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

123, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

### கோழிக் குஞ்சு விநியோகம்

10—03—2001 ஆம் திகதி இச்சங்கத்தில் ஒரு நாள் முட்டை இன கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். கோழிக் குஞ்சுகள் தேவைப்படுவோர் 07—03—2001 ஆம் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொள்ளவும். பதிவு செய்யும் ஒழுங்கில் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். எமது சங்க அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

-நிர்வாகம்.

(84775)


### நீங்காத நினைவுகளில் இரண்டாம் ஆண்டு



### அமரர் சண்முகம் சோமசுந்தரம்

[உரிமையாளர், கரணவாய் சண்முகம் ஸ்ரோர்ஸ், விரகேசரி, உதயன் பத்திரிகை முகவர்]

அன்னை மடியில் 03 — 07 — 1934

ஆண்டவன் அடியில் 22 — 02 — 1999

திதி: 02 — 03 — 2001 (ஸப்தமி)

அன்பாலும் பாசத்தாலும் பண்பாலும் நல்வழி காட்டிய எம்குல விளக்கே! எம்மைப் பிரிந்து ஈராண்டுகளானாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம் இதயத்தை விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய, எம் உயிர் உள்ள வரை, எல்லாம் வல்ல கருணையம்பதி மூத்தவிநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

நிலன் குழத்தான் மேலன்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(84602)

## செஞ்சிலுவை நோயாளர் கப்பற் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையேயான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இம் மாதத்தில் 5 தடவைகள் இடம்பெறவுள்ளன.

நேற்று முதலாம் திகதி இடம்பெற்ற சேவையை விட எதிர்வரும் 8 ஆம், 15 ஆம், 22 ஆம், 29 ஆம் திகதிகளிலும் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கான சேவைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## 301 தபாற் பொதிகள் நேற்று வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 2

காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 301 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 49 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

## பெயரை மாற்றம் செய்யக் கோரிக்கை

சங்கானை மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் பெயரை ''வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலை'' என்று பெயர்மாற்றம் செய்து தருமாறு வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்தி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பான வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் வி. நடராசா தெரிவித்துள்ளார். (க-135)

## தோட்டத் தொழிலாளர்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இந்தியப் பிரதித் தூதர் பங்கேற்பு

கொழும்பு, மார்ச் 2

தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வுகோரி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் நடத்திவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இலங்கைக்கான இந்தியப் பிரதித் தூதுவர் மல்கோத்திராவும் நேற்று முன்தினம் பிற்பகல் கலந்துகொண்டார்.

சத்தியாக்கிரகம் நடைபெறும் இடத்திற்குப் பிற்பகல் 3 மணிக்கு வந்த இந்திய பிரதித் தூதர் சத்தியாக்கிரக மேடையில் ஒரு மணி நேரம் வரை அமர்ந்திருந்தார். சத்தியாக்கிரகத்திற்குப் பிரதி அமைச்சர் சந்திரசிறி கயதிரவும் நேரடியாக வந்து ஆதரவு தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மேடையில் அமர்ந்திருந்து தமது ஆதரவைத் தெரிவித்தார்.

சத்தியாக்கிரகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டமையினால் பிரதான வீதியி சில மணிநேரம் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

கொழும்பில் இருந்தும் வேறு பகுதிகளில் இருந்தும் நுவரெலியா, ஹற்றன், கொட்டகல, தலவாக்கலை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. (ம)

## ஆலயத்தின் பெயரில் தண்டல்

யாழ்ப்பாணம், மார்ச். 2

ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்கு வருடந்தோறும் நெல் கொடுத்து வரும் ஒரு குடும்பத்திடம் அடியார் வேடம் பூண்ட தண்டல் பேர் வழிகள் இருவர் 2 புசல் நெல்லை ஏமாற்றிப் பெற்றுள்ளனர்.

இச் சம்பவம் காரைநகர் களபூமிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாங்கள் இருவரும் ஆலயத்தில் இருந்து வருவதாகக் கூறி வெளியூரில் இருந்து வந்த அந்த பேர்வழிகள் இருவரும் நெல்லைப் பெற்றுக்கொண்டு தலைமறைவாகி விட்டனர்.

இச் சம்பவத்தை அடுத்து ஆலய ஆதினகர்த்தாக்கள் ஆலயத்துக்குப் பொருள்கள் மற்றும் பணம் என்பவற்றை வழங்க விரும்பும் அடியார்கள் அவற்றை நேரடியாக ஒப்படைத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (க-10-73)

## கிளாலிப்பாடசாலைவரை சென்று திரும்பிய உப அஞ்சலக அதிபர்

### 100 யார் தூரம் செல்ல அனுமதி மறுப்பு

தென்மராட்சி, மார்ச் 2

கிளாலி உப அஞ்சல் அலுவலகத்தில் உள்ள உடைமைகளை மீட்டுவர கிராஞ்சி றோமன் கத்தோலிக்க பாடசாலை வரை சென்ற உப அஞ்சல் அதிபர், அலுவலகத்துக்குச் செல்ல முடியாமல் திரும்பியுள்ளார்.

உபஅஞ்சல் அதிபர் ஸ்ரனிஸ்லோஸ் கடந்த திங்கட்கிழமை விடத்தற்பளை கேடில்ஸ்நகர் ஊடாக கிளாலி பாடசாலை வரை சென்றபோதும் அந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் உள்ள உப அஞ்சல் அலுவலகத்திற்குச் செல்ல முடியவில்லை பாடசாலைக்கு அருகிலுள்ள காவலரணில் நின்ற படையினர் அப்பால் செல்ல அனுமதிக்கவில்லை என்று ஸ்ரனிஸ்லோஸ் தெரிவித்தார்.

கிளாலி சந்தியில் உள்ள கடைகள், வீடுகள் சேதமடைந்து காணப்படுகின்றன என்றும் சந்தியில் உள்ள தேவாலயம், பாடசாலை, உப அஞ்சல் அலுவலகம் ஆகியவை பெரியளவில் சேதமடையவில்லை என்றும் அவர் சொன்னார். (க-117)

## அரசு - புலிகள் சமாதான முயற்சியில் இரு தரப்புக்கும் இடையிலான முரண்பாடுகள் குறைகின்றன

### நோர்வே அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

இலங்கை அரசையும் விடுதலைப்புலிகள் அமைப்பையும் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதில் காணப்பட்ட இடைவெளிகளையும் முரண்பாடுகளையும் நோர்வே ஓரளவுக்கு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது என்று நோர்வே சென்றுள்ள இலங்கை நாடாளுமன்றக் குழுவிடம் நோர்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் வழிவகைகளை ஆராய்வதற்கென கடந்த வியாழக்கிழமை இலங்கையிலிருந்து நோர்வே சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நோர்வேயில் அரசியல் முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வில் முரண்பாடுகளையும் அபிப்பிராயங்களையும் கொண்டிருக்கும் கட்சிகள் அடங்கிய இந்தத் தூதுக்குழுவில் த. வி. கூ. ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பி தவராஜா, ஐ.தே.க. மஹிந்த சமரசிங்க ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

இதேவேளை —

ஒஸ்லோவில் ஐ. தே. க. பிரதிநிதியான மஹிந்த சமரசிங்க புலிகளின் நிலைப்பாட்டுடன் தொடர்புபட்ட கருத்துக்களையே இலங்கைத் தமிழர்களிடம் தெரிவித்துள்ளாரெனத் தகவல்கள் கூறுகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழல்ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை நாடாளுமன்றஉறுப்பினர்களின் நோர்வே விஜயம் தமது முயற்சியை மேலும் பலப்படுத்த உதவுமெனவும் சமாதான முன்னேற்பாடுகளுக்கு உத்வேகமளிக்குமெனவும் நோர்வே நம்புவதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

நோர்வே தனது சமாதான முயற்சிகளில் கணிசமான வெற்றிகளை அடைந்துள்ளது என நோர்வே தூதரகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். முரண்பாடுகள் களையப்பட்டுவருகின்றன. சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்படமாட்டாது எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ம)

## யாழ்.மாணவனின் தந்தை சட்டமா அதிபருக்குக் கடிதம்:

# இலவசப் பாடநூலை சீராக வழங்காதது உரிமை மீறல்!

## அரசு மீது வழக்குத் தொடர முன்னேற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்2

குடாநாட்டுக்குப் பாடப்புத்தகங்களை சீராக விநியோகிக்காததன் மூலம் மகனுக்கு கல்வி கற்பிக்கும் தனது அடிப்படை உரிமையை அரசு மறுப்பதாகவும், இதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் அரசின் மீது உரிமை மீறல் வழக்குத் தொடரப் போவதாகவும், குடாநாட்டு மாணவன் ஒருவரின் தந்தை சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல் கடிதம் அனுப்பியுள்ளார்.

சுன்னாகம் கடவைப்புலத்தைச் சேர்ந்த அ.பரமேஸ்வரன் என்பவரே இந்தக் கடிதத்தை அனுப்பியவராவார். தனது அறிவுறுத்தல் கடிதத்தில் பரமேஸ்வரன் தெரிவித்துள்ளதாவது:-

பாடப்புத்தக விநியோகத்தைச் சீராக்க சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை அல்லது மாற்று வழிகளை மேற்கொள்ளத் தவறியதாலேயே சட்ட வழியை பின்பற்ற நேரிட்டுள்ளது.

பாடசாலைப் புத்தகங்களை தயாரித்து, அச்சிட்டு விநியோகிக்கும் ஏகபோக உரிமை அரசிடமே உள்ளது.

எனது மகன் தரம் 10 இல் கற்கிறார். அவரது பாடசாலையில் 3-1-2001 இல் ஆரம்பித்த கல்வி ஆண்டில் இதுவரை தேவையான 10 பாடங்களுக்கான புத்தகங்களில் 2 பாடங்களுக்கான புத்தகங்கள் மட்டுமே அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து பாடப்புத்தகங்கள் வந்துசேரவில்லை என்று கல்வி அதிகாரிகள் காரணம் கூறுகிறார்கள்.

கடந்த சில வருடங்களாகவே யாழ்.குடாநாட்டில் இந்த நிலைமை நீடிக்கிறது. கடந்த ஆண்டு இந்த விடயத்தை கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு எடுத்துச் சென்றேன். அத்துடன் நாளிதழகளும் இது குறித்து செய்தி வெளியிட்டன.

ஆனாலும் இவற்றால் பலனேதும் ஏற்படவில்லை.

யாழ்.கல்வித் திணைக்களத்தை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தியின்படி இந்த வருடம், 5 லட்சத்து 93 ஆயிரத்து 855 பாடப் புத்தகங்கள் யாழ்ப்பாணத்துக்குத் தேவைப்படுகின்றன.

ஆனால் நடப்புக் கல்வியாண்டில் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக, இதுவரை 3 லட்சத்து 30 ஆயிரத்து 612 புத்தகங்களே பெறப்பட்டுள்ளன.

தரம் 3,8 மற்றும் 11 ஆகிய வகுப்புக்களுக்கான பாடப்புத்தகங்கள் எவையும் இதுவரை வந்து சேரவில்லை.

தரம் 11 என்பது பொதுப்பரீட்சையான ஜி.சீ.ஈ.சாதாரண தரம் என்பது குறிப்பிடத்தக்கது.

தரம் 7 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு கடந்த ஆண்டிலும், மற்றைய தரங்களுக்கு இந்த ஆண்டிலும் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. இதனால் முன்னர் விநியோகிக்கப்பட்ட பாடபுத்தகங்கள் காலாவதியாகிவிட்டன. மேலும், தரம் 10, 12 ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் மறு ஆண்டில் முறையே ஜி.சீ.ஈ.சாதாரண, உயர்தர பரீட்சைகளில் தோற்றுவதால் பரீட்சை எழுதி முடிக்கும் வரை அவசியம் கருதி பாடப்புத்தகங்களை திருப்பி ஒப்படைக்க முடியாது.

அரசு, எனது மகனைப் போன்றே மேலும் பல்லாயிரக்கணக்கான எமது பிரதேச மாணவர்களை கல்விச் செயற்பாடுகளில் குறைபாடுள்ளவர்களாக்கியுள்ளது. இதன் மூலம் குடாநாட்டு மாணவர்களின் எதிர்காலங்களை அரசு புதைகுழியில் தள்ளியுள்ளது.

கொழும்பில் உள்ள பொறுப்புள்ள அரச அதிகாரிகள் போதுமான பாடப் புத்தகங்களை அனுப்புவதில்லை. அல்லது குறிப்பிட்ட பாடங்களுக்கு அறவே அனுப்புவதில்லை. தமிழ் மொழி மூலம் பாடநூல்கள் போதுமான அளவு அச்சிடப்படாமை அல்லது குறிப்பிட்ட பாடங்களுக்கு உரிய நூல்கள் தயாரிக்கப்படாமை ஆகியவையே இந்த நிலைக்குக் காரணம் என்று தெரிய வருகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பத்திரிகை ஆசிரியத் தலையங்கம், செய்திகள் ஆகியவை யாழ். குடாநாட்டு மாணவர்கள் மீது (எனது மகன் மீதும்) அரசாங்கம் காட்டும் பாகுபாட்டின் தீவிரத்தன்மையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தென்னிலங்கையில் நிலவாத இத்தகைய ஒரு சூழ்நிலைக்கு யாழ். குடாநாட்டு மாணவர்கள் மட்டும் பலிகடாக்கள் ஆக்கப்படுகின்றனர்.

போக்குவரத்துப் பிரச்சினைகளோ, யுத்த சூழ்நிலையோ புத்தகங்களை தேவையான அளவில், குறித்த நேரத்தில் அனுப்புவதற்குக் காரணங்களாக இருக்க முடியாது. ஏனென்றால கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒழுங்காகச் சரக்குக் கப்பல் சேவைகள் இடம்பெறுகின்றன. சரக்கு விமான சேவைகளும் நடைபெற்று வருகின்றன. விமானப் படையினரையும், செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரையும் அணுகியிருந்தால் பாடப் புத்தகங்களை எடுத்துவர அவர்கள் உதவியிருப்பார்கள்.

கொழும்பிலிருந்து கொண்டு வரும் மற்றப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் தாராளமாகப் பெருகி வழியும் போது பாடப்புத்தகங்கள் மட்டும் தாமதமின்றி வந்து சேரத் தவறுகின்றன.

மகனுக்கு கல்வி கற்றுத் தரும் எனது அடிப்படை உரிமையை, அரசு மறுப்பதுடன், எனது மகனுக்கு பாகுபாடு காட்டுவதன் மூலம் அரசமைப்புச் சட்டத்தையும் அது மீறுகிறது. உரிமை மீறல்களுக்காக நீதிமன்றத்தை அணுகுவதற்கு இவை போதுமானவையாகும்.

இந்த நிலை தொடர்ந்தால் அரசினால் உரிமைகள் மறுக்கப்படுவதற்கும், பாதிக்கப்படும் எனது மகனின் எதிர்காலத்துக்கு நஷ்டஈடு கோரியும் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நேரிடும். அந்த வழக்கு, பின்னர் இது விடயமாகத் தொடரப்படக் கூடிய வழக்குகளுக்கு பரீட்சார்த்த வழக்காக அமையும் என்பது உறுதி.

இவ்வாறு பரமேஸ்வரன் சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் வெளிவந்த பத்திரிகைச் செய்திகளின் ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் அவர் கடிதத்துடன் இணைத்துள்ளார்.

சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதிகள் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர், அரசமைப்பு விவகாரம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர், வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சர், கல்வி சார் வெளியீடுகளின் ஆணையாளர், தேசிய கல்விக் கழகத் தலைமை இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-ஓ)

# மனிதனின் உடம்பும் இறைவனின் கோயிலே; உடம்பைப் பேணுதல் கடவுளை ஓம்புதலாகும்

"குவியாக்கரங்கள் வந்து எங்கே எனக்கு இங்ஙன் கூடியவே!"

"இறைவனை வணங்காத தலை எனக்கு எங்கே வாய்த்தது? அவன்பால் அன்புகொண்டு குவியாக் கரங்கள் வந்து எனக்கு எங்கே கூடின?" என்று சொன்ன பிறகு அருணகிரியாருக்கு உடம்பைப் பற்றிய நினைப்பு வந்தது. இது எப்போதும் நிலையாக இருப்பது அன்று; ஆதலின் நிலையான ஒரு புகலிடம் வேண்டும் என்பதைச் சொல்கிறார்.

உயிருக்கு மூன்று உடம்புகள் உறைகளைப் போல் இருக்கின்றன. பனியன், சேட், கோட் என்று மூன்று சட்டைகளைச் சிலர் அணிந்து கொளவது போன்று இது. வெளியே தோறறும் உடம்பு பருவுடல்; தூல சரீரம். அது உயிருக்கு வெளியுறையாக இருப்பது. இதனையன்றிக் காரண சரீரம், சூட்சும சரீரம் ஆகிய இரண்டு உட்சட்டைகள் வேறு இருக்கின்றன. நம் கண்ணுக்குத் தோன்றும் பருவுடல் மரணமடைந்தபின் அழிந்து போகிறது. தூலசரீரம் என்ற வெளிச்சட்டையை விட்டு உயிர் அகன்று விடுகிறது. ஆயினும் காரண சரீரம், சூட்சும சரீரம் ஆகிய இரண்டையும் அது விடுவது இல்லை. பிரளய காலத்தில் சூட்சும சரீரமும் போகிறது. அப்போதும் காரண சரீரம் அழிவது இல்லை. உயிர் எப்போதும் உடம்போடே இருக்கும் தன்மை வாய்ந்தது.

ஞானக்கதிர்

எல்லாக் காலத்தும் உயிர் ஒரு சரீரத்தோடு இருந்து இன்ப துன்ப அனுபவங்களைப் பெறுகிறது. உயிர் எந்தச் சரீரத்தின் தொடர்பும் இல்லாமல் நேரே அநுபவிக்கின்ற அநுபவம் முத்தி இன்பம் ஒன்றுதான். அது அல்லாத மற்ற இன்ப துன்ப அநுபவங்கள் எவற்றையும் உடலின் வாயிலாகத் தான் உயிர் அநுபவிக்க முடியும்.

இரும்பைக் காய்ச்ச வேண்டுமென்றால் எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பிலே அப்படியே தூக்கிப்போடலாம். சிறிது நேரத்தில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்போடு இரும்பு காய்ந்து தகதகவென ஒளிவிடத் தொடங்கும். ஆனால் பாலைக் காய்ச்ச வேண்டுமானால் இரும்பைப் போட்டதுபோல அடுப்பிலே கொட்ட முடியாது. அப்படிக் கொட்டினால் பாலும் இராது, நெருப்பும் இராது. நெருப்பும் சூட்டை வாங்கி அதனிடத்தில், காரச் செய்கின்ற பாத்திரமொன்று இடையில் வேண்டும்.

### உடம்பும் அநுபவமும்

அவ்வாறே உயிர் நேரே அநுபவத்தைப் பெறுவது இறைவனுடன் இணைந்து முத்தியாகிய இன்பம் பெறும்போதுதான்; இரும்பு நேரே சூட்டைப்பெறுவது போன்றது அது. அப்படியின்றி நல்வினை தீவினைகளின் பயனாகிய இன்ப துன்ப அநுபவத்தை பெறும்போது பாலுக்கும் தீக்கும் இடையிலுள்ள பாத்திரத்தைப் போன்று ஒரு சரீரம் வேண்டும். உலக அநுபவங்களாகிய இன்ப துன்பங்கள் சரீர சம்பந்தமாகவே வரும். உலகில் வாழும் போது இந்தத் தூல சரீரத்தின் சம்பந்தமாக அநுபவங்கள் வருகின்றன. உலகில் வாழ்ந்து, மரணம் அடைகிறவர்கள் நரகத் துன்பத்தையும், சொர்க்கலோக இன்பத்தையும் அநுபவிக்கிறார்கள். அந்த அநுபவம் எதைச் சார்ந்து வருகிறது? இந்த வெளி உடம்பு இல்லாவிட்டாலும் உள்ளுறையாக இருக்கிற சூட்சும சரீரத்தைச் சார்ந்து வருகிறது.

இத்தகைய மூன்று வகையான சரீரங்களில் எதுவுமே இல்லை என்றால் உயிர் நேரே இறைவனோடு ஒன்றி எல்லையில்லாத ஆனந்தத்தைப் பெறுகிறது. எனவே, உயிர் எப்போதும் தனித்து இராது. ஒன்று உடம்போடு ஒட்டியிருக்க வேண்டும் அல்லது இறைவனைச் சார்ந்து இருக்க வேண்டும்.

உயிர் சரீரத்துக்கு உட்பட்டு இருப்பதே ஒரு வியப்பு தரும் கட்டுப்பாடு. சரீரத்துக்குக் கட்டுப்பட்டு உயிர் இருக்கும் வரையில் பக்தன் என்றும், சரீரக் கட்டுப்பாட்டை விட்டபோது முத்தன் என்றும் சொல்வார்கள். கட்டுப்பட்டவன் பக்தன். விடுபட்டவன் முத்தன். இறைவன் இயல்பாகவே முத்தனாக இருக்கிறான். அவனைச் சார்ந்த உயிர்களும் எல்லா விதமான பந்தத்தினின்றும் விடுபடுகின்றன.

### அற்புதமான உடம்பு

உலகில் வாழும் போது பல வகை நுகர்ச்சிகளையும் அடைகிற இந்த புற உடலை இறைவன் மிக அற்புதமாகவும் மிக நுட்பமாகவும் படைத்திருக்கிறான். இந்த இயந்திரத்துக்குள்ளே எத்தனையோ சிறிய சிறிய உறுப்புக்கள் இருக்கின்றன. புதிய புதிய இயந்திரங்களை விஞ்ஞானிகள் படைக்கும் போது கண்டு வியந்து போற்றும் நாம் உடலாகிய அற்புத யந்திரத்தைப் பார்த்து மிக்க வியப்பை அடைவதில்லை. எளிதில் நம் முயற்சியில்லாமலேயே இது கிடைத்திருப்பது தான் காரணம். எங்கே பார்த்தாலும் இருப்பதனால் இதன் அருமை தோன்றுவது இல்லை. மிக நுட்பமான பொருளைக் காட்டும் 'மைக்ராஸ்கோப்'பைக் கண்டு வியக்கிறோம். தொலைவிலுள்ள பொருளைக் காட்டுகின்ற 'டெலஸ்கோப்'பை கண்டு வாயைப் பிளக்கிறோம். நம் கண்ணின் பெருமையை எண்ணிப் பாருங்கள். இதற்கு நுண்பொருளைக் காட்டும் கருவியையும் தொலை பொருளைக் காட்டும் கருவியையும் ஒப்பிடலாமா? கண்ணால் பல பொருளைப் பார்க்கிறோம் என்பது மாத்திரம் அல்ல. எதிரே இருப்பவர்களுக்கு நம் இருதயக் கருத்தை எடுத்துக் காட்டும் கண்ணாடியாக வேறு இருக்கிறது. "ஐயா கண் சிவந்து இருக்கிறது; கோபமாக இருக்கிறார்", என்றும், "நீர் வழிகிறது; துக்கம் போலிருக்கிறது" என்றும் தான் காட்டுகின்ற அடையாளத்தைக் கொண்டே உள்ளத்தின் உணர்ச்சியை உணர்ந்து கொள்ள கருவியாக அது விளங்குகிறது. இப்படி எதிரே உள்ளதைக் காணவும் உள்ளத்தில் உள்ளதைக் காட்டவும் பயன்படும் கண் போன்ற வேறு ஓர் இயந்திரத்தை மனிதனால் ஆக்க முடியுமா?

**கி.வா.ஜகந்நாதன்**

அது கிடக்கட்டும். கைகளைப் பாருங்கள். நன்கு நீட்டவும் மடக்கவும் பொருள்களைப் பற்றி எடுக்கவும் விரல்கள் எத்தனை பொருத்தமாக அமைந்திருக்கின்றன! கைகளிலேயுள்ள ரேகைகள் சோதிடம் பார்ப்பதற்காக அமைந்தவை என்று சிலர் நினைக்கலாம். கை நன்றாக மடங்கி விரிய வேண்டுமானால் இடம் வேண்டாமா? ரேகையில் மடங்கும் படி ஆண்டவன் அமைத்திருக்கிறான். இப்படிப் பற்பல வகைகளில் ஆச்சரியப்படும் படியாக, இறைவனுடைய திருவருள், உயிர் வாழ்வதற்கு உரிய வீடான இந்த உடம்பைக் கட்டிக் கொடுத்திருக்கிறது.

ஒரு வீட்டில் நாம் குடியிருக்கிறோம். வீடு நமக்குச் சொந்தமானது அன்று. இருந்தாலும் நாம் அதில் வாழ்வதனாலே ஒட்டடை அடித்து வைத்துக் கொள்கிறோம். எங்காவது ஒழுகினால் ஓடு மாற்றிக் கொள்கிறோம். நம்முடைய வீடு அல்லவே; எதற்காக நாம் ஓடு மாற்ற வேண்டும்? ஏன் ஒட்டடை அடித்துச் சுண்ணாம்பு அடித்து வைத்துக் கொள்ளவேண்டும்? நாம் அதில் வாழ வேண்டியிருக்கிறது! பூச்சி, பொட்டுகள் விழும்; மழை பெய்தால் ஒழுகும். நாம் அங்கே வசிப்பதனாலே நமக்குத் தான் அவற்றால் துன்பம். வீட்டினால் வருகின்ற பொருள் ஊதியம் வீட்டுக்காரனுக்கு என்றாலும், அதனால் வருகின்ற துன்பங்கள் அங்கே இருப்போரை சார்கின்றன. அங்கே இருக்கும் காலம் வரையில் துன்பங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம்முடையதாகிறது.

### உடம்பைப் பேணுதல்

அதுபோல உடம்பு நமக்குச் சொந்தமானதல்ல என்றாலும், அதனால் வருகின்ற துன்பங்களைப் போக்கிக் கொண்டு அதை நன்றாக நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தைத் திருமூலர் சொல்கிறார்.

முதலில், "உடம்பு ஒரு மலபாண்டம். இழுக்குடையது. இதை எதற்காக பாதுகாக்க வேண்டும்?" என்று தான் அவர் இருந்தாராம். பின்பு உடம்பினை நன்றாகப் பேணத் தொடங்கினார். எதற்காக? நன்றாக சதை வைக்க வேண்டும், ஊன் நன்றாக வளர வேண்டும் என்பதற்காக அன்று. உடம்புக்குள்ளே இறைவன் உறைகிறான் என்பதை உணர்ந்து கொண்டார். ஆண்டவன் கோயிலாகிய இதை நன்றாக பாதுகாத்துக் கொள்வது முறையல்லவா? உடம்புக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டான் எனத் தெரிந்து கொண்டால், அவ்வுத்தமனைக் காண வேண்டுமென்று ஞானம் படைத்தவர்கள் உடம்பைப் பேணுவார்கள்.

(நன்றி:- *'மயில் ஏறிய மாணிக்கம்'* என்ற தொகுப்பு நூல்) ※


பாராட்டி வாழ்த்துகின்றோம்



மார்ச் 10இல் பொன்விழாக் காணும்

உயர்திரு.க.தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்)

பொன்விழா நாயகர் வாழ்க!

ஏற்றமும் பணிவும் ஒன்றாய் இயங்குநற் சிந்தையாலும்
ஆற்றலும் முயற்சியோடும் அனுசரிக்கின்ற - நேச
வார்த்தைசொல் மலர்ச்சியாலும் 'வாண்மை' யென்றுயர்ந்த கல்விப்
பேற்றினுக்குரிய எங்கள் பெருமகன் தேவர் வாழ்க!

*யாழ்.மத்திய கல்லூரி.* (84704)

திரு.P.திருஞானசம்பந்தன். வர்த்தக ஆசிரியர்

# 17 வருடங்களின் பின் மீண்டும் யாழ்.மக்கள் வங்கிக் கிளைகளில் நகை அடகு வைக்கும் பணி

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் 17 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் நகை அடகு வைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, கன்னாதிட்டி மற்றும் பருத்தித்துறையிலுள்ள கிளைகளிலேயே இந்த செயற்பாடுகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

இது தொடர்பாக யாழ்.நகரிலுள்ள வட வலய மக்கள் வங்கி அலுவலக அதிகாரிகள் கொழும்பிலுள்ள மக்கள் வங்கியின் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

தலைமையகத்தின் உத்தரவு கிடைத்ததும் உடனடியாக நகை அடகு வைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புக் காரணங்களினால் யாழ்ப்பாணத்தில் 1983 ஆம் ஆண்டு நகை அடகு வைக்கும் செயற்பாடுகளை மக்கள் வங்கி நிறுத்திக் கொண்டது. 1983ஆம் ஆண்டு அடகு வைத்தவர்களின் நகைகளில் ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகள் கொழும்பிலுள்ள மக்கள் வங்கித் தலைமைச் செயலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நகைகளின் உரிமையாளர்கள் நகை அடகுப் பணத்தைச் செலுத்தியவுடன், கொழும்பிலிருந்து நகைகளைப் பெற்று அவர்களிடம் ஒப்படைத்து வருகின்றோம் என்றும்-

இந்த நகைகளுக்கு ஒரு வருட வட்டியே அறவிடப்படுகிறது என்றும்- அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(க-5)

## கைகள் முறிந்து இரு மாணவர்கள் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மார்ச்2

பாடசாலையில் நடைபெற்ற உயரம் பாய்தல் விளையாட்டுப் போட்டிகளின் போது தவறிவீழ்ந்து கைகள் முறிந்த நிலையில் இரு மாணவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய மாணவன் உ.கன் அமல்ரன் (வயது-13) என்பவர் இடது கை முறிந்த நிலையிலும் சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய மாணவன் நடேசன் கௌசீகன் (வயது 14) வலது கை முறிந்த நிலையிலும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(க-6-ரி)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

02.03.2001



HAPPY BIRTHDAY

### செல்வி ஜஸ்லினா

திருநெல்வேலியைச் சேர்ந்த

ஜீவராசா - தனுஷா தம்பதிகளின்

செல்வப் புதல்வி ஜஸ்லினா

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (02-03-2001)

வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில்

வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பாட்டிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல குழந்தை யேசு அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*வளாக வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (84756) ~ குடும்பத்தினர்.

## மட்டுவில் கமலாசினி மாணவர், ஆசிரியர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்2

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது வேறு பாடசாலைகளில் தரம் 5இல் பயிலும் மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டியுள்ளதால் -

மாணவர்கள் அனைவரும் தங்கள் பெயர், பிறந்த திகதி, தற்போது கல்வி பயிலும் பாடசாலை ஆகிய விவரங்களை வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் இயங்கும் மேற்படி பாடசாலை அதிபரின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதிபர் எஸ் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

மட்டுவில் கமலாசினி வித்தியாலய ஆசிரியர்கள் அனைவரும் தமது சம்பளப் பணத்தை நெல்லியடியிலுள்ள அதிபரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க-10)

## போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ். கல்வி வலயத்தின் முறைசாராப் பிரிவில் தொழில் பயிற்சி, எழுத்தறிவூட்டல் பாடநெறிகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமை, அனுபவம் என்பவற்றுடன் சுயமாக விண்ணப்பங்களைத் தயாரித்து உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்விப்பிரிவு யாழ். கல்வி வலயம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 09ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைகக்கப்படல் வேண்டும் என யாழ். கல்வி வலயம் அறிவித்துள்ளது. (க-51)

## கட்டடங்கள் திறப்பு விழா

வேலணை,மார்ச்2

வேலணை மேற்கு நடராஜ வித்தியாலய நூலகக் கட்டடம், குடிதண்ணீர் தாங்கி மற்றும் வகுப்பறைக் கட்டடங்கள் ஆகியவற்றின் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.சரவணபவானந்தன தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. தீவக அமைப்பாளர் ந.மதனராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, புளியங்கூடல் மகா மாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் து.சிவஞானசெல்வம் மற்றும் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி செபாலக்சுந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-167)

## சிப்பாய்க்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்2

புத்தூர்ப் பகுதியில் யுவதி ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாக அடையாளம் காணப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவரை யாழ்.நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதித்தது.

அச்சுவேலி இராணுவ முகாமைச் சேர்ந்த அஜித்குமார என்ற சிப்பாயே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த இராணுவ சிப்பாயை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்த யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா வழக்கை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (க-6)

## கூட்டம்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-10)

## யாழ்.ஆஸ்பத்திரி தவிர்ந்த பிற வைத்தியசாலைகளில் ஏற்புத் தடுப்பு மருந்து இல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்2

குடாநாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையைத் தவிர ஏனைய வைத்தியசாலைகளில் ஏற்புத் தடுப்பு மருந்து இல்லாமல் இருப்பதால் நோயாளிகள் பலர் உயிராபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சத்தியமூர்த்தி என்ற விவசாயிக்கு தோட்டத்தில் வேலை செய்த போது கடந்த வாரம் தென்னம் ஈர்க்கு குத்தியது. இவர் உடனடியாக அந்தப் பிரதேசத்தில் உள்ள அரச வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்ற போது ஏற்புத் தடுப்பு மருந்து இல்லை எனக் கூறி ஊசி போடவில்லை.

ஒரு வாரத்தின் பின்னர் இவருககு ஏற்புவலி ஏற்பட்டதை அடுத்து ஆபத்தான நிலையில் அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டார்.

ஏற்புவலி ஏற்பட்ட பின்னர் ஏற்பு மருந்து தடை ஊசி போடுவது பயனற்றது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டின் கிராமப் பகுதி வைத்திய சாலைகளில் ஏற்புத் தடுப்பு மருந்து இல்லை என்று பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதும் இதுவரை குடாநாட்டுக்கு ஏற்புத் தடுப்பு மருந்துகள் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும்-

யாழ்.போதனா ஆஸ்பத்திரியிலும் ஏற்புத் தடுப்பு மருந்தின் கையிருப்பு மிகவும் குறைவாகவே இருப்பதாகவும்-

வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (உ-6-ரி)

## நெடுந்தீவு மணல்துறையில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கும் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

நெடுந்தீவு மத்தி - மணல்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அடுத்து வைததியசாலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டு, அந்தப் பணியில் ஈடுபட்ட சுமார் 25 ஊழியர்கள் யாழ்ப்பாணம் திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயுள்வேத திணைக்களம் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் இந்த வைத்தியசாலையை அமைக்கும் பணியை ஆரம்பித்ததும்-

வைத்தியசாலைக்கான அத்திவாரக் கல் நடும் வைபவம் கடந்த மாதம் 5 ஆம் திகதி நடைபெற்றதும் - தெரிந்ததே.

வைத்தியசாலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டதை அடுத்து இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியை கொழும்பில் உள்ள ஆயுள்வேத திணைக்களத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

## கிணற்றுக்குள் வீழ்ந்து மரணம்

காரைநகர்,மார்ச்2

காரைநகர் பகுதியில் பெண் ஒருவர் கிணற்றுக்குள் வீழ்ந்து பரிதாபகரமாக மரணமானார். காரைநகர் கரபிட்டியந்தனையைச் சேர்ந்த சரவணபவானந்தன் நேசமலர் (வயது 39) என்பவரே மரணமானவர் எனவும், இவர் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-73)

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 21 - 10 - 1957



மறைவு 17 - 01 - 2001

### அமரர் இரத்தினம் சந்திரலிங்கம்

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக இன்று (02.03.2001) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
ரேணுகா (மனைவி),
பிள்ளைகள்:
பிரியா, சாமினி, ஜனா,
சுபாங்கன், மயூரன், தர்சிகா
மற்றும்
சகோதரர்கள், மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள்,
பெறாமக்கள்.

*3ஆம் குறுக்குத் தெரு,*
*பருத்தித்துறை.* (84707)

## இலவச கணனிப் பயிற்சித் திட்டம்

MOBILE NET MCS COMPUTER SERVICES

324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் 2001ஆம் ஆண்டில் இலவச பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.

புதிய பிரிவு ஆரம்பம்: 09.03.2001

(C/15504) *பதிவுகளை 07.03.2001க்கு முன்பாக மேற்கொள்ளவும்.*

# சமாதான முயற்சிக்கு பிரிட்டனின் தீர்மானம் தடையாக அமையாது!

## அந்நாட்டின் கொழும்புத் தூதரகம் அறிக்கை

கொழும்பு,மார்ச்2

சமாதானப் பேச்சை சாத்தியமான அளவுக்கு விரைவாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஆரம்பிக்க வேண்டும் என பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

நோர்வேயின் அனுசரணை முயற்சிக்கு பிரிட்டன் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என நேற்றுமுன்தினம் இரவு கொழும்பில் உள்ள பிரிட்ஷ் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைப்பொன்றின் நடவடிக்கைகளின் தன்மை, பிரிட்டனுக்கு இருக்கும் அச்சுறுத்தல், வெளிநாடுகளில் இருக்கும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள், பிரிட்டனில குறித்த அமைப்பின் பிரசன்னம், பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டிய தேவை ஆகிய காரணங்கள் உட்பட பல காரணிகளைக் கருத்திற் கொண்டே உள்துறை அமைச்சர் தடை செய்யப்படும் அமைப்புக்கள் தொடர்பான தீர்மானத்துக்கு வந்துள்ளதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான பிரிட்டனின் உறுதியான நிலைப்பாட்டையே இத் தீர்மானம் வெளிபடுத்துக்கிறது. அதே சமயம் இருதரப்பாரும் பேச்சு மூலமான தீர்வு குறித்து இதயசுத்தியுடன் ஈடுபடுவார்களேயானால், இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தத் தீர்மானம் ஒரு சுமையாக அமையாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் இனநெருக்கடிக்குச் சகல சமூகங்களினதும் அபிலாஷைகளையும் நிறைவேற்றக் கூடிய பேச்சு மூலமான நிரந்தரத் தீர்வே ஒரே வழியென பிரிட்டன் தொடர்ந்தும் நம்புகிறது. நோர்வேயின் அனுசரணைக்குப் பிரிட்டன் தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆசிரிய கலாசாலைகளுக்கு புதிய மாணவர்கள் அனுமதி

காரைநகர்,மார்ச்2

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இவ்வருடம் பயிற்சி பெறுவதற்கு ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்குரிய விளம்பர அறிவித்தல்கள் அடுத்த சில தினங்களில் கொழும்புப் பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்படும் என கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாக கிளைக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபருக்கு அறிவித்துள்ளார்.

விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்த மாதிரி விண்ணப்பப்படிவங்களை இம் மாதம்15ஆம் திகதிக்கு முன்னர் வழமை போல் அல்லாது இம்முறை தாங்கள் பயிற்சி பெற விரும்பும் ஆசிரிய கலாசாலை அதிபர்களுக்கே அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் -

புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முதலாம் வருட ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் முதலாம் வருடப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-73)

## ரூ.400 சம்பள உயர்வு இல்லையேல் தொண்டமானை பதவி விலக மலையக மாணவர் கோரிக்கை

கொழும்பு,மார்ச்.2

நாளை சனிக்கிழமைக்கு முன் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்றும் -

இல்லையேல் பெருந்தோட்டத் துறை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பதவி விலக வேண்டும் என்றும் -

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலையக மாணவர் முன்னணி, மலையகப் பல்கலைக்கழக மாணவர் முன்னணி என்பன இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

ரூபா 400 சம்பள உயர்வு கோரி தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 10 தினங்களாக ஹற்றன் நகரில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி வருவது தெரிந்ததே.

(உ-7)

## சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.வி பாடசாலையை பழைய நிலைக்கு கொண்டுவர மக்கள் உதவ வேண்டும்

### மெய்வன்மைப் போட்டியில் உரை

வேலணை,மார்ச்2

தீவகத்தின் புகழ் பூத்த கல்லூரியான வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தினை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரத் தீவக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் -

பாடசாலையின் பழைய மாணவனும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருமான ஜே.எக்ஸ்செல்வநாயகம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பாடசாலை அதிபர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

தீவகத்தின் புகழ் பூத்த பாடசாலைகளில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயமும் ஒன்று. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாடசாலையின் தரம் பற்றி யாவரும் அறிந்திருப்பீர்கள். ஆனால் தற்பொழுது இங்கு பல வசதியீனங்கள் நிலவி வருகின்றன. இப்பாடசாலையானது தனது பழைய நிலையினை அடைவதற்காக மிகவும் உத்வேகத்துடன் போராடி வருகின்றது. இப் போராட்டத்திற்கு தீவக மக்களாகிய நாம் ஊக்கமும், ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

முன்னர் இருந்தவாறு தீவகத்தின் சகல மாணவர்களும் விடுதியில் தங்கி கல்வி பயிலக்கூடிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். பாடசாலைச் சூழலானது பாதுகாப்புப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதனால் மாணவர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடிவதில்லை. அத்தோடு பாடசாலையின் பழைய மைதானத்தையும் பாவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இக் குறைபாடுகளை நீக்கி தீவக மாணவர்களின் கல்விக்கு ஒளி ஊட்ட இப்பாடசாலையினை பழைய நிலைக்கு தரம் உயர்த்திட தீவக மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தரும், யாழ்.பல்கலைக்கழக மெய்வல்லுநர் பயிற்சியாளருமான ஏ.எஸ்.செபமாலைமுத்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போதிய பயிற்சி என்பன இல்லாமலேயே இப்பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத் துறையில் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய விளையாட்டு உபகரணங்களையும் பயிற்சியினையும் அளித்தால் மாவட்ட, மாகாண மட்டத்தில் இவர்கள் சிறந்த பெறுபேறுகளை அடைவார்கள் என்பது உறுதி.

தீவகத்தில் மிக விரைவில் விளையாட்டுத்துறை தொடர்பான பயிற்சி முகாம் ஒன்றை அமைத்து செயற்பட இருக்கின்றோம் - என்று கூறினார். (ம-167)

## இலவச ஆங்கிலப் பயிற்சி நெறி

ஊர்காவற்துறை,மார்ச்2

ஊர்காவற்துறை இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனத்தினால், காரைநகர் பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு போருட் நிறுவனத்தின் அனுசரணையுடன் விரைவில் 6 மாதங்களைக் கொண்ட இலவச ஆங்கிலப் பயிற்சி நெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு 15-29 வயதுக்குட்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-16)

## சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

வலி.தென் மேற்கு,மார்ச்2

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் பாடசாலையில் இடம்பெறும் என மாவட்ட பயிற்சியாளர் ந.சுசீந்திரராஜா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் 18 வயதிற்குட்பட்ட வறிய சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ், சீருடை, கல்வி உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன என்றும் -

எனவே மேற்படி கூட்டத்தில் இளவாலை, பெரியவிளான், மாரீசன் கூடல், சித்திரமேழி, பிரான்பற்று ஆகிய பகுதிச் சிறுவர்களை கலந்து கொள்ளுமாறும் -

அவர் தெரிவித்துள்ளார்.(ம-185)

## கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி மாணவருக்கு!

தென்மராட்சி,மார்ச்2

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்கு -

நெல்லியடி கிறிஸ்டல் தனியார் கல்வி நிலையத்தில் இயங்கும் வித்தியாலயத்திற்கு பெற்றோருடன் வருகைதருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க-117)


## வைரவர் ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

வண்ணார்பண்ணை பி.ஏ தம்பி வீதியில் அமைந்துள்ள ஞான வைரவர் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கோவிலின் கும்பாபிஷேகம் இம்மாதம் 26ம் திகதி திங்கட்கிழமை நடைபெற உள்ளது. கடந்த 30 வருடங்களுக்குப் பின்னர் கும்பாபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (க-73)

## தெய்வீக ஸ்தலங்களில்...



நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தானத்தில் அண்மையில் 10 நாள் திருவாதிரை ஊஞ்சல் விழா நடைபெற்றது.

முத்துக்குமாரசுவாமிக்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பிரதம குருவும், நவாலி அட்டகிரி முருகன் ஆலய பிரதம குருக்களுமான பிரம்மஸ்ரீ கா.துரைச்சாமிக் குருக்கள் தீபாராதனை செய்கிறார். (ஐ-185)



குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 3ஆம் திகதி நடைபெற்றது. அன்று பக்தர்களின் தரிசனத்திற்காக ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட புதுமை மாதாவின் திருச் சொருபத்தை படத்தில் காணலாம். (க-51)



பருத்தித்துறை வியாபாரிமூலை - இன்பர்சிட்டி சித்தி விநாயகர் ஆலயத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு வாசல் சப்பறம் அண்மையில் வெள்ளோட்டம் விடப்பட்டது. வெள்ளோட்ட நிகழ்வில் சப்பறத்தை அமைத்த சிற்பாசாரியார் விஸ்வப்பிரம்மஸ்ரீ ந.சற்குருநாதன் கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனால் பாராட்டிக் கௌரவிக்கப்படுகிறார்.

ஆலய பிரதம குருக்கள், சப்பறத்தை அன்பளிப்புச் செய்த பொ.சின்னையா மற்றும் சிற்பக்கலா விநோதன் செ.பாலச்சந்திரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (க-7)



கடந்த டிசெம்பர் மாதம் கொக்குவில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள புனித-அந்திரேயா தேவாலயப் பிரதிஷ்டையின் போது வருகை தந்த தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண.எஸ். ஜெபநேசனுக்கு பிடாரி அம்மன் ஆலய பரிபாலன சபையின் தலைவரும், முன்னாள் ஆசிரியருமான பொ.கந்தையா மாலை அணிவித்து வரவேற்றார். அச்சமயம் எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அரியாலை, ஆனந்தன் வடலி றோட் எனும் முகவரியை உடைய துரைராஜா பாஸ்கரன் என்பவருடைய விசேட அ.அ. (இல.0902000735) நல்லூருக்கும் பொஸ்கோ பாடசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 103, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (84745)

64, ஓட்டுமடம் வீதி, வண்ணார் பண்ணை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி சுந்தரலிங்கம் என்பவரது தேசிய அ.அ. (இல.456752136V), விசேட அ.அ. (இல.0902032781) என்பன பேர்சுடன் 23.02.2001 அன்று பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிவா கொமினிக்கேசன், **(IBMS** முன்பாக) கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (84768)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்வன் சபாநாதன் தனேசன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0905017553) யாழ்.இந்துக் கல்லூரிக்கும் சுதுமலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். (84776)

## வீடு விற்பனைக்கு

சுதுமலை, யாழ்.வீதி சந்தியில் 2 பரப்பில் 4 அறைகள் கொண்ட சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- கு.விசுவநாதன், மானிப்பாய் மெடி கிளினிக், யாழ்.வீதி, மானிப்பாய். (84773)

## தேவை

கணக்கு எழுதுவதில் அனுபவமும் ரைப்பிங் செய்வதிலும், ரெலிபோன் இயக்குவதிலும் அனுபவமும் உள்ள பெண் லிகிதர் தேவை. விண்ணப்பங்கள் இல.1225, மே/பா. உதயன். (84741)

## உடன் விற்பனைக்கு

**FORD ESCORT** கார் உடன் விற்பனைக்குண்டு. (4 **DOORS**) தொடர்பு:- இல.9, வேலப்பர் லேன், கனகரட்ணம் றோட், அரியாலையில் எந்நேரமும் பார்வையிடலாம். (84772)

## மணமகன்கள் தேவை

1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 வரையான படித்த பட்டதாரி ஆசிரியைகளுக்கு அரசாங்க உத்தியோக மணமகன்கள் தேவை. அத்துடன் சொந்தக்கடை வைத்திருக்கும் மணமகன்களும் தேவை. தொடர்பு:- அபிராமி திருமண சேவை, பரந்தாமன் ராசாத்தி, ஆடியபாதம் சந்தை வீதி, முதலாம் ஒழுங்கை, கொக்குவில். (84767)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், ஆலடிச் சந்திக்கு அருகில் மெயின் றோட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **K.**நடராசா, **VSK** மானிப்பாய்.(84702)

## விற்பனைக்கு

**"HONDA C-90 ECONO POWER"** நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.சண்முகநாதன், 75, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (84696)

ரைப்ரைற்றர் (ஆங்கிலம்), எலக்ரிக் ரில்லர் (ஸ்ராண்டுடன்), எலக்ரிக் கிறைண்டர், ஸ்பிரிங் கிளருடன், கோஸ் பைப், பற்றிசாச்சர், மேசை என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல.6, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (84769)

## ஊர்காவற்றுறையில் கடற்படையினர் நேற்று தேடுதல்

ஊர்காவற்றுறை,மார்ச்2

ஊர்காவற்றுறையில் பருத்தியடைப்பு மற்றும் காம்ப் வீதி உள்ளிட்ட பகுதிகள் நேற்று வியாழன் காலை 6 மணிக்கு கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வீதியால் சென்றவர்கள் தடுத்து வைக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடற்படையினர் வீடுகளுக்குச் சென்று அடையாள அட்டைகளை பரிசீலனை செய்ததுடன் அறைகளையும் சோதனையிட்டனர். (க-16)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செயவதற்கு இம்மாதம் முதலாம் திகதி வரை அனுமதி வழங் கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(172566ஏ) (172566பி) (177885ஏ)
(177885பி) (177885சி) (180540ஏ)

### யாழ்ப்பாணம்

(172444ஏ)

### கரவெட்டி

(171123ஏ) (142346ஏ) (142346பி)
(142346சி) (142346டி) (143575ஏ)
(143575பி) (151751ஏ) (151751பி)
(151751சி) (151751டி) (154966ஏ)
(155923ஏ) (155923பி) (155923சி)
(158364ஏ) (158440ஏ) (159941ஏ)
(159941பி) (160331ஏ) (160331பி)
(160331சி) (160331டி) (164646ஏ)
(164646பி) (164646சி) (164646டி)
(165333ஏ) (165333பி) (165333சி)
(167380ஏ) (167485ஏ) (167485பி)
(167485சி) (167485டி) (169601ஏ)
(169601பி) (169930ஏ) (169930பி)
(169930சி) (172261ஏ) (172266ஏ)
(172267ஏ) (172366ஏ) (172366பி)
(172560ஏ) (174416ஏ) (174416பி)
(174632ஏ) (174632பி) (174632சி)
(176173ஏ) (176173பி) (176173சி)
(176173டி) (176173ஈ) (176173எவ்)
(176234ஏ) (176234பி) (176234சி)
(176234டி) (176279ஏ) (177562ஏ)
(177782ஏ) (177782பி) (177827ஏ)
(177872ஏ) (177873ஏ) (177910ஏ)
(177926ஏ) (177926பி) (177926சி)
(177933ஏ) (177975ஏ) (178009ஏ)
(178009பி) (178009சி) (178009டி)
(178009ஈ) (180381ஏ) (180381பி)
(180411பி) (180412ஏ) (180436ஏ)
(180460ஏ) (180460பி) (180487ஏ)
(180489ஏ) (180500ஏ) (180503ஏ)
(180508ஏ) (180509ஏ) (180517ஏ)
(180517பி) (180519ஏ) (180532ஏ)
(180533ஏ) (180533பி) (180533சி)
(180533டி) (180533ஈ) (180538ஏ)
(180539ஏ) (180543ஏ) (180544ஏ)
(180544பி) (180544சி) (180551ஏ)
(180552ஏ) (180562ஏ) (180583ஏ)
(180610ஏ) (181056ஏ) (181059ஏ)
(181059பி) (181065ஏ) (181070ஏ)
(181070பி) (181071ஏ) (181072ஏ)
(181087ஏ) (181090ஏ) (181109ஏ)
(181131ஏ) (181131பி) (181131சி)
(181131டி) (181131ஈ) (181134ஏ)
(181134பி) (181137ஏ) (181137பி)
(181139ஏ) (181337ஏ) (181344ஏ)
(181344பி) (181344சி) (181344டி)
(181344ஈ) (181397ஏ) (182346ஏ)
(182460ஏ) (183536ஏ) (183536பி)
(183536சி) (183556ஏ) (183556பி)
(183556சி) (183583ஏ) (183685ஏ)
(183685பி) (183757ஏ) (183757பி)
(183826ஏ) (183826பி) (183926ஏ)

### கோப்பாய்

(177388ஏ) (177410ஏ) (180634ஏ)
(180634பி) (180634சி) (180639ஏ)
(180639பி) (180649ஏ) (180650ஏ)
(180650பி) (180650சி) (180660ஏ)
(180660பி) (180666ஏ) (180670ஏ)
(180670பி) (180720ஏ) (180721ஏ)
(180739ஏ) (180739பி) (180756ஏ)
(180779ஏ) (180779பி) (180779சி)
(180811ஏ) (180811பி) (180858ஏ)
(180858பி) (180858சி) (180858டி)
(180867ஏ) (180886ஏ) (180912ஏ)
(180912பி) (180924ஏ) (180924பி)
(180930ஏ) (180930பி) (180932ஏ)
(180939ஏ) (180950ஏ) (180952ஏ)
(180952பி) (180973ஏ) (180973பி)
(180973சி) (180989ஏ) (181005ஏ)
(181005பி) (181023ஏ) (181023பி)
(181026ஏ) (182890ஏ) (182903ஏ)
(182903பி) (182903சி) (182903டி)
(182903ஈ) (182921ஏ) (182953ஏ)
(184028ஏ) (184077ஏ)

### நல்லூர்

(170732ஏ) (170920ஏ) (171413ஏ)
(171415ஏ) (171417ஏ) (171421ஏ)
(171422ஏ) (171424ஏ) (171425ஏ)
(171427ஏ) (171428ஏ) (171429ஏ)
(171438ஏ) (171441ஏ) (171443ஏ)
(171446ஏ) (171451ஏ) (174141ஏ)
(177156ஏ) (177161ஏ) (177161பி)
(177161சி) (177177ஏ) (177177பி)
(179715ஏ) (179732ஏ) (179738ஏ)
(179738பி) (179738சி) (179738டி)
(179739ஏ) (179740ஏ)

### பருத்தித்துறை

(127639ஏ) (153887ஏ) (153887பி)
(153887சி) (153887டி) (158171ஏ)
(158171பி) (165156ஏ) (167469ஏ)
(167958ஏ) (168043ஏ) (168043பி)
(169849ஏ) (169922ஏ) (169923ஏ)
(169923பி) (172362ஏ) (172362பி)
(172362சி) (176309ஏ) (177739ஏ)
(177739பி) (177739சி) (177762ஏ)
(177762பி) (177762சி) (177762டி)
(177762ஈ) (177930ஏ) (177930பி)
(177930சி) (180385ஏ) (180421ஏ)
(180422ஏ) (180534ஏ) (180555ஏ)
(180555பி) (180555சி) (180555டி)
(180555ஈ) (181088ஏ) (181104ஏ)
(181104பி) (181106ஏ) (181107ஏ)
(181119ஏ) (181159ஏ) (181174ஏ)
(181299ஏ) (181299பி) (181299சி)
(181353ஏ) (181353பி) (182258ஏ)
(182439ஏ) (182439பி) (182471ஏ)
(182471பி) (183281ஏ) (183754ஏ)
(183784ஏ) (183900ஏ) (185331ஏ)
(185331பி) (185331சி) (185334ஏ)
(185334பி) (185334சி) (185334டி)
(185334ஈ) (185334எவ்)

### தெல்லிப்பழை

(174052ஏ) (174052பி)

### உடுவில்

(170733ஏ) (170735ஏ) (179606ஏ)
(170606பி) (179667ஏ) (179696ஏ)
(179696பி) (179779ஏ) (179779பி)
(184047ஏ) (184047பி) (184047சி)
(184047டி) (184050ஏ) (184051ஏ)
(184062ஏ) (184062பி) (184062சி)
(184062டி) (184063ஏ) (184064ஏ)
(184076ஏ) (184089ஏ) (க-10)

# கண்டி அஸ்கிரிய மைதானம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம்

கொழும்பு,மார்ச்2

இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையேயான இரண்டாவது ரெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ள கண்டி அஸ்கிரிய மைதானப் பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி இந்த மைதானத்தில் இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ரெஸ்ட் போட்டி ஆரம்பமாக உள்ளது.

போட்டி நடைபெறும் போது நூற்றுக்கணக்கான பொலீஸார் மைதானத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும்- பார்வையாளர்கள் அனைவரும் தீவிர சோதனைக்குப் பின்னரே மைதானத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (ம)

## பண்ணிசை வகுப்புகள்

வலிகாமம் தெற்கு, மார்ச்2

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் இசைவகுப்புகளும் பண்ணிசை வகுப்புக்களும் தற்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன.

இந்து இளைஞர் மன்ற பணிமனையில் சங்கீதம், நடனம். மிருதங்கம் ஆகிய வகுப்புக்கள் தைப்பூச தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெற்று வருகின்றன. (க-152)

## கொக்குவில் மேற்கு, மணியர்பதி இந்து இளைஞர் மன்றம்

## சைவ சமய அறிவுப் பரீட்சை - 2001

மேற்படி பரீட்சை எதிர்வரும் 09.03.2001 வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் குறித்த நேர அட்டவணையின்படி நடைபெறும்.

செயலாளர்
பரீட்சைக்குழு

(84777)

# மரண அறிவித்தல்

## சூசை லிகோறி (சின்னக்கிளி)
## (அண்ணாவியார்)

17/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாவியார் லிகோறி (சின்னக்கிளி) 01.03.2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லூர்த்து பிலோமினா (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயசீலன் (முன்னாள் மாநகரசபை மின்சாரப் பகுதி ஊழியர், 'கசி கொன்ஸ்ரக்சன்' உரிமையாளர்), றெனின் குயின்ரஸ், புறுனோபாபு (உரிமையாளர் 'டி.ஜே.கிங்ஸ் வீடியோ கிளப்' தெகிவளை), காலஞ்சென்ற கிறேசியன், நிர்மலன் (வட.ப.தெ.வ. அ.கூ.ச.சமாச ஊழியர்), லின்டா, லைலா, இந்திரா, விஜிதா விக்ரறின் (குடும்ப நல உதவியாளர், யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலாயுதம், கணேஸ், சந்திரன் (சவூதி), ராஜன், தர்மசோதி, சிறி, ராணி,றெஜினா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.03.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

17/2,மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. 021-3450
024-23377
01-728369

தகவல்
எஸ்.சி.ஜெயசீலன் (மகன்)

(84788)





இலகுவானது, பாதுகாப்பானது, பயனுள்ளது, பேன்களுக்கெதிரான நிவாரணி.
*வாரம் ஒரு தடவை* தொடர்ந்து பாவித்துவரின் உங்களினதும் பிள்ளைகளினதும் கேசத்தில் *பேன்களையும் ஈருகளையும்* முற்றாக இல்லாதொழிக்கும்.
தற்போது 10ml, 50ml அளவுகளில் எங்கும் கிடைக்கும்.

**Hemas Marketing (pvt) Ltd.** ஊடாக விநியோகிப்பவர்கள்:

றூபா பன்முக வர்த்தகம்

104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி15511)

# பருத்தித்துறைப் பொலீஸில் தொடரும் காணாமற் போனோர் விசாரணை

## அழைக்கப்பட்டோரின் பெயர், விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

காணாமற் போனோர் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் நடைபெறும் விசாரணைக்கு சமூகமளிக்குமாறு பின்வருவோருக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(காணாமல் போனவரின் பெயர் அடைப்புக்குள் காணப்படுகிறது).

★ கனகலிங்கம் ஆனந்தராணி, கொக்குவில் மேற்கு கனகலிங்கம் அமிர்தலிங்கம், காணாமல் போனது தொடர்பாக)

★ கணேசு மகேஸ்வரி அராலி கிழக்கு — (கணேசு சுதாகரன்)

★ இராசையா நடராசா சுதுமலை தெற்கு—(நடராசா சாந்தரூபன்)

★ கணேசமூர்த்தி சிறீ சண்முக ரஞ்சனி வேம்படி, சுழிபுரம் — (விநாசித்தம்பி கணேசமூர்த்தி)

★ புனிதவதி ஆசீர்வாதன், மல்வம், உடுவில் — (ஆசீர்வாதன் பழனி)

★ பூலோகதேவி சிவசுப்பிரமணியம், சுழிபுரம் கிழக்கு (சிவசுப்பிரமணியம் அரியதாஸ்)

★ சாந்தினி தர்மலிங்கம், கப்பத்தனை, சுந்தரோடை — (சீனியர் தர்மலிங்கம்)

★ பூரணன் நாகமுத்தன், கேரதீவு வீதி, கோவிலாக்கண்டி (ஆறுமுகம் பரமநாதன்)

★ பரமேஸ்வரன், கைதடி மத்தி கைதடி— (கோபால கிருஷ்ணன் சின்னட்டி)

★ கந்தையா சின்னத்தம்பி சண்முகலிங்கம், கைதடி நுணாவில் (சதாசிவம் விவேகானந்தன்)

★ வல்லிரத்தினம், நவரத்தினம் கேமலதா, நவரத்தினம் தவராஜா, விமலராஜா (நால்வரும்) நாவற்குழி தெற்கு — (நவரத்தினம் ஆனந்தராஜ )

★ இராஜேந்திரன் சிவாஜினியின் அப்பா (பெயர் குறிப்பிடப்படவில்லை) அச்சுவேலி வடக்கு (இரத்தினம் இராஜேந்திரன் )

★ வெற்றிவேல், பிள்ளையார் வீதி வல்வெட்டித்துறை — (தாமோதரம்பிள்ளை —உதயகுமார்)

★ கிருபநாதன் அன்னபூரணம், வல்லிபுரம் அருந்தவராஜா (இருவரும்) 1 ஆவது ஒழுங்கை, பருத்தித்துறை— (வல்லிபுரம் அற்புதநேசன்)

★ ஞானேந்திரன் சந்திரலேகா, எழுதுமட்டுவாழ் முகாம் அருகில், பளை— (சின்னத்தம்பி ஞானேந்திரன்)

★ செல்லம்மா பிள்ளைகள் வேவில்காடு வடக்கு கொடிகாமம் — (வேலுப்பிள்ளை உதயகுமார்)

★ நாகமணி வதனி, அருளம்பலம் நாகேஸ்வரி, குட்டியன் தேவராஜ் (மூவரும்) மட்டுவில் வடக்கு — (சிவகுமார்- புத்தூர், சரஸ்வதி சவுந்தரராஜா)

★ ஐ பொன்னையா, மீசாலை மேற்கு, கதிரன் கந்தசாமி, கந்தசாமி சிறீ பிரியா, மந்துவில்—(ஐ உதயகுமார்)

★ கந்தையா பொன்னம்மா, மட்டுவில் சாவகச்சேரி— (கந்தையா சிறீகரன்)

★ சின்னப்பு சின்னத்தம்பி, கோவிலாக்கண்டி — (சின்னத்தம்பி திருச்செல்வம்)

★ பூ. வள்ளி, விக்னராஜா தயாவதி — (இராமலிங்கம் சிறிஸ்கந்தராஜா, இராமலிங்கம் விக்னராஜா ஆகிய இருவரும் காணாமல் போனது தொடர்பாக)

★ செல்லம்மா தங்கையா, திருநாவுக்கரசு லோகேஸ்வரன், அன்னபூரணம், அன்னலட்சுமி (மூவரும்) குடமியன் வரணி — (நடராஜா ஜீவரத்தினம்)

★ பாலசுந்தரம் கரன், சிறீகாந்தன், கச்சாய் வீதி, கொடிகாமம், சின்னத்தம்பி சிறீஸ்கந்தராசா, சிதம்பரநாதன் ஜநாத் சுந்தரம், இடைக்குறிச்சி வரணி — (வல்லிபுரநாதன் பவானந்தன்)

★ சிறீஸ்கந்தராஜா, சந்தனவேலு சிறீஸ்கந்தராஜா, நுணாவில் கிழக்கு. சாவகச்சேரி — (பிள்ளையார் பாஸ்கரன்).

★ இரத்தினசிங்கம் பிரியதர்சன், பேக்கரி வீதி, கெருடாவில், அன்ரன் தெய்வேந்திரன் நாகேந்திரராணி இயக்கச்சி வீதி, பளை, வீரப்பன் ஐயர் முகுந்தகுமார், மிருசுவில், பொன்னம்பலம் சிவசுதன் டச்சுவீதி, சாவகச்சேரி, நாகமுத்து பானுமதி ஒட்டுவில் ஒழுங்கை சாவகச்சேரி— (அன்ரன் தெய்வேந்திரன் ரமேஷ்).

★ விவேகானந்தன் பிறேமலதா, சிவராசா சந்திரகாந்தி, இந்திரபுரம் ஒட்டுவில் வடக்கு, சின்னராசா கனகரத்தினம், ஒட்டுவில் கிழக்கு, மு. பாலசுப்பிரமணியம் ஒட்டுவில் மேற்கு (சதாசிவம் விவேகானந்தன்).

★ சுவாமிநாதன் சமயோகநாதன் நுணாவில் மேற்கு — (பத்மநாதன் சுதர்சன்).

★ மாலன் முரளிதரன் மீசாலை மேற்கு, சின்னத்துரை சிவராசா மீசாலை வடக்கு, கதிர்காமன் கிருஷ்ணன், இயற்றாலை கொடிகாமம், முத்துக்குமார் புவனேஸ்வரி, மீசாலை — (பரமநாதன் நடேஸ்வரன்) காணாமல் போனது தொடர்பாக.

★ ராஜ்குமார், விடத்தல்பளை மிருசுவில்—(கந்தசாமி ஞானகரன்).

★ ஜெகதீஸ் தவமணி. ஈச்சமோட்டை வீதி சுண்டிக்குளி - (தவம் ஜெகதீஸ் ஜெகதீபன்).

★ கோவிந்தசாமி தனலட்சுமி அராலி வீதி, சங்கானை - (தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி).

★ மயிலாவதி மகலேஸ்வரன் கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, சிவக்கொழுந்து மாசிலாமணி கலைமகள் வீதி. நல்லூர் வடக்கு - (வேலுமூர்த்தி)

★ சிவசுப்பிரமணியம், இராசாவின் தோட்டம் அமிர்தலிங்கம் அருளானந்தம். தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை — (தங்கவடிவேல் ராஜேந்திரகுமார்)

★ குப்புசாமி நாகேஸ்வரி ஆனைக்கோட்டை — (குப்புசாமி உதயகுமார்) காணாமல் போனது தொடர்பாக.

(க-5 6-ரி)

### மீளக்குடியமர்ந்து 6 வருடங்களாகியும்

## மெலிஞ்சிமுனைப்பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் இல்லை

ஊர்காவற்றுறை, மார்ச் 2

ஊர்காவற்றுறையிலுள்ள மெலிஞ்சிமுனைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேறி ஆறு வருடங்களுக்கு மேலாகியும் இது வரை இப் பகுதிக்கு குழாய் மூலமான நீர் விநியோக வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

இப் பிரதேசத்தில் நிலக்கீழ் நீர்உவர் நீர்த்தன்மை கொண்டதாகக் காணப்படுவதால் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு ஒரு மைல் தொலைவில்உள்ள கரம்பனுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அதிகாரிகளின் பணிப்பின் பேரில் இப் பகுதி மக்களால் நீர் விநியோகக் குழாய்கள் பொருத்துவதற்கான வாய்க்கால்கள் வெட்டி பல மாதங்கள் கடந்து விட்டன. அவையும் இப்போது மண்ணால் மூடப்பட்டு காணப்படுகின்றன.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் சுட்டிக் காட்டியும் இது வரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதது குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-16)

## நிமலராஜன் நினைவாக கனடாவில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 2

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நினைவாக கனடாவில் ''நினைவழியா நிமல்'' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

சிந்தும் குருதியின் மத்தியில் எழுதுகோலும், நிமலராஜனின் வர்ணப்படமும் பொறிக்கப்பட்ட முகப்பு அட்டையுடன் இந்த நூல் வெளியாகியுள்ளது.

நூலில் சர்வதேச செய்தி நிறுவனங்கள், நிமலராஜனின் படுகொலையையொட்டி வெளியிட்ட அஞ்சலிச் செய்திகள் உட்பட இப் படுகொலையைக் கண்டிக்கும் கண்டன அறிக்கைகள், அஞ்சலிக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (ம-99)

## தமிழீழ கோரிக்கைக்காக புலிகளை பிரிட்டிஷ் அரசு தடை செய்யவில்லை

### அந்நாட்டு அமைச்சர் தெளிவுபடுத்துகிறார்

லண்டன், மார்ச் 2

தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை நாம் தடை செய்யவில்லை. அவர்களால் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மற்றும் குண்டு வெடிப்புகளால் பலர் கொல்லப்பட்டதாலேயே தடைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்று பிரிட்டன் உள்விவகார அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சார்ள்ஸ் கிளார்க் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களுடன் புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது ரி.பி.ஸி செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ஈழக் கோரிக்கையை முன்வைத்து பிரிட்டனில் செயற்படலாமா என செய்தியாளர் கேட்ட போது அவர் சிரித்தவாறு நீங்களும் தமிழ் ஈழத்துக்காகப் போராடலாம். அதனை யாரும் தடுக்கவில்லை. தடுக்கவும் மாட்டார்கள். மனிதப் படுகொலைகள் இடம்பெற்றால் தடுக்க வேண்டி ஏற்படும் என்றார்.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்த பின்னர் அவர்கள் தொடர்பான செய்திகள் எழுதும் போது புலிகளுக்குச் சாதகமான செய்திகள் பற்றி எழுதலாமா என்று கேட்ட போது செய்திகள் வெளியிடுவதில் தவறில்லை. புலிகளுக்கு சாதகமான செய்திகள் எதுவானாலும் நீங்கள் வெளியிடலாம் என பதிலளித்தார்.

(க)

## கேபிள் தொலைபேசி சேவையை சுன்னாகம் வரை விஸ்தரிக்குக!

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

வலிகாமம்தெற்கு, மார்ச் 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்றாவது பெரிய பட்டினமாகவுள்ள சுன்னாகத்திற்கு இதுவரை கேபிள்லைன் தொலைத்தொடர்பு சேவை ஏற்படுத்தப்படவில்லை. தாவடிச் சந்திவரை உள்ள கேபிள் லைன் சேவையை சுன்னாகம் வரை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வலி-தெற்கு பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் உதவி பணிப்பாளர், உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர், வலிதெற்கு பிரதேசசபை உத்தியோகத்தர் உட்பட பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பெரிய நகரமாக சுன்னாகம் விளங்கிய போதும் இங்கு இதுவரை காலமும் கேபிள் தொலை தொடர்பு சேவை கிடைக்கவில்லை. தாவடிச் சந்திவரையுள்ள கேபிள் சேவையை சுன்னாகம் வரை விஸ்தரிப்பதுடன் இப்பகுதியில் அமைந்துள்ள பத்து உப தபாலகங்களுக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் — என அங்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

★ இம்முறை நெற்பயிரின் விளைவு குன்றியுள்ளதால் அடுத்த விதைப்புக்கு தேவையான விதைநெல்லினை கமநல சேவை திணைக்களத்தினூடாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

★ பங்குனி மாதத்தில் அச்சுவேலி கோழிப் பண்ணையில் இருந்து கிடைக்கும் நல்லின கோழிக்குஞ்சுகளை பெற்று கோழி வளர்ப்போருக்கு வழங்க வேண்டும்.

★ பங்குனி மாதம் 15ஆம் திகதிக்குள் இப் பிரதேச செயலகத்தால் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடிப்பது.

★ சுன்னாகம் பொதுசன நூல் நிலையத்துக்கு அருகில் உள்ள காணியை சிறுவர் பூங்கா அமைப்பதற்காக பெற்றுக் கொள்வது.

(க-152)

## வீதிச் சீர்கேட்டால் போக்குவரத்து சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ் ஐந்து சந்தியிலிருந்து மனோகரா தியேட்டர் சந்தி வரை செல்லும் முக்கிய வீதியான நாவலர் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது குண்டுங் குழியுமாக போக்குவரத்திற்கு சீர்கெட்ட நிலையில் உள்ளது.

இதனை விரைவில் புனரமைத்துத் தருமாறு யாழ். மாநகர சபையிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-135)

## பாடசாலைக்கு பணம் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு. மார்ச் 2

குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிக்கான பரிசுப் பொருள்களை வழங்க பருத்தித்துறை பிரதேசசபை உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் 7 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தை பாடசாலை அதிபர் கே. கே. யோகநாதனிடம் அன்பளிப்பாக வழங்கினார். (க-182)

## தபாற் சோதனை நடவடிக்கை இடமாற்றம்

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் தபால்களின் பொலீஸ் சோதனை இன்று வெள்ளிக்கிழமை முதல் யாழ். பிரதம தபாலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டன் தெரிவித்துள்ளார்.

கடந்த 96 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள மெதடிஸ்த தேவாலயத்துக்குச் சொந்தமான அறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த இச் சோதனை நடவடிக்கை இன்று தொடக்கம் பிரதம தபாலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. (க-10)

## கொழும்புக்கு கருணைக்கிழங்கு!

வெங்காயம், புழுக்கொடியல், கருணைக்கிழங்கு என்பன 'கிரிந்த' கப்பல் மூலம் கொழும்புக்கு தனியார் வர்த்தகர்களால் அனுப்பி வைக்கப்பட உள்ளன. (ம-185)

# அமெரிக்க நகரங்களை பூகம்பம் தாக்கியது!

## வாஷிங்ரனில் அவசரநிலை பிரகடனம்

வாஷிங்ரன், மார்ச் 2
அமெரிக்காவின் வடமேற்கு மாநிலங்களிலும் மத்திய அமெரிக்காவிலும் நேற்று முன்தினம் பலத்த பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சியால்டர் நகருக்குத் தென்மேற்கே 56 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் 6.8 ரிச்டேர் அளவைக் கொண்டிருந்தது. சியால்டர், போட்லண்ட் ஆகிய நகரங்களில் வீடுகள் இடிந்ததாகவும் மேற்கு வாஷிங்ரனில் 100 கோடி டொலர்கள் மதிப்புக்குப் பொருள் சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பூகம்பத்தின் காரணமாக ஒருவர் உயிரிழந்ததுடன், 250 பேர் காயமடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'போயிங்' விமானத் தயாரிப்பு நிறுவனம், 'மைக்ரோ சொவ்ட்' கணனி தயாரிப்பு நிறுவனம் ஆகியவையும் பூகம்பத்தால் சேதமடைந்து உள்ளன.

வாஷிங்ரனில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

கனடாவில் வான்கூவர், விக்டோரியா ஆகிய மாநிலங்களிலும் பூமியதிர்ச்சி பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், மத்திய அமெரிக்காவில் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இரு நிலநடுக்கங்களால் தாக்கப்பட்ட எல்சல்வடோரை 6 ரிச்டேர் அளவிலான மற்றொரு நிலநடுக்கம் நேற்றுத் தாக்கியுள்ளது.

## சீனாவின் மனித உரிமை மீறலை விமர்சிக்கும் தீர்மானம் ஐ.நா.வில்

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டு மாநாட்டில் சீனாவின் மனித உரிமைச் செயற்பாடுகளை விமர்சிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவர உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் ஈராக் மீதான பொருளாதாரத் தடைகளை சீனா உடைப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் வெளிப்படையாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

தற்போது சீனாவின் மனித உரிமை மீறல்களை விமர்சிக்கும் தீர்மானம் குறித்து அமெரிக்கா கூறியுள்ளது.

இந்த நடவடிக்கைகளால் கோபமடைந்த சீனா. மிகச் சிறிய எண்ணிக்கையிலான பெரும் செல்வந்தர்களே அமெரிக்க சமுதாயத்தை கட்டுப்படுத்துவதாக அமெரிக்காவை விமர்சித்துள்ளது.

இத்தகைய பரஸ்பர ஆத்திர மூட்டும் விமர்சனங்கள் இரு நாடுகளிடையேயான உறவை மேலும் சிக்கலாக்கும் என்று கருதப்படுகிறது.

(ஒ)

## இந்திய வரவு செலவுத் திட்டத்தை குறை கூறும் எதிர்க்கட்சிகள்

புதுடில்லி, மார்ச் 2
இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஏழைகளுக்கு எதிரானது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் தொழில் துறையில் காணப்படும் முதலீட்டுப் பஞ்சத்தைப் போக்கும் துணிச்சலான முயற்சிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும்—

விவசாயிகளையும், தொழிலாளர்களையும் பாதிக்கும் அம்சங்கள் அதிகம் என்றும்—

காங்கிரஸ் கட்சி குறைகூறியுள்ளது.

பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படும் சீனியின் விலை, தபால் கட்டணம் ஆகியன உயர்த்தப்பட்டிருப்பதை எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

இதேவேளை, வளர்ச்சி நோக்குடைய இந்த வரவு செலவுத் திட்டத்தால் முக்கிய தொழில் துறைகளில் ஊக்கம் பிறந்து வேலை வாய்ப்புகள் அதிகம் உருவாகும் என்று பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

(ஒ-7)

## இந்தோனேசிய கலவரத்துக்காக

# வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை பாதியில் முடிக்க வாஹிட் மறுப்பு

ஜகார்த்தா, மார்ச் 2
இந்தோனேசியாவில் இடம் பெறும் கலவரம் காரணமாக வெளிநாட்டுப் பயணத்தைப் பாதிவழியில் முடித்துக் கொண்டு நாடு திரும்பும்படி விடுக்கப்பட்ட கோரிக்கைகளை இந்தோனேசிய அதிபர் அப்துர் ரஹ்மான் வாஹிட் நிராகரித்துள்ளார்.

மத்திய கலிமந்தான் பகுதியில் 'டயா' பழங்குடியினருக்கும், அங்கு குடியேற்றப்பட்டவர்களுக்கும் இடையே கலவரம் மூண்டுள்ளது.

இந்தச் சமயத்தில் அதிபர் வாஹிட், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இனக்கலவரத்தால் நூற்றுக்கணக்கானவர்கள் இறக்கும் சூழ்நிலையில் அதிபர் வாஹிட் நாட்டில் இல்லாது இருப்பதற்கு கண்டனம் தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகள், அவர் உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன.

சுற்றுப் பயணத்தின்போது எகிப்தில் செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் வாஹிட் இந்தக் கோரிக்கையை நிராகரித்தார்.

கலவரம் தொடர்பான செய்திகள் மிகைப்படுத்தப் பட்டதாகவும் —

தலைமைப் பாதுகாப்பு அமைச்சர், தேசிய பொலீஸ் தலைவர் ஆகியோர் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளலாம் என்று ஆலோசனை கூறியதாலேயே தான் விஜயத்தைத் தொடர்வதாகவும்—

அப்போது அதிபர் வாஹிட் கூறினார்.

இது ஒரு புறமிருக்க,

இந்தோனேசியாவில் கலவரப் பகுதிகளில் கலகக்காரர்களைக் கண்டதும் சுடுமாறு பொலீஸாருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது.

'டயா' பழங்குடி இனத்தவர் 84 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து கத்திகள் ஈட்டிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகவும் மாகாண அரசு தெரிவித்துள்ளது.

(எ-7-10)


## திருமறைக் கலாமன்றம்

## தவக்கால ஒலி நாடாக்கள்

கிறிஸ்தவர்களின் தவக்கால பக்தி முயற்சிக்கு உதவக்கூடிய ஒலிநாடாக்கள் எமது மன்றத்தினால் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

- கல்வாரி இராகங்கள் விலை 150/-
- வியாகுல பிரசங்கம்—7 (பசாம் பாடல்) விலை 150/-
- வியாகுல பிரசங்கம்—8 (பசாம் பாடல்) விலை 150/

தொடர்புகளுக்கு:
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி; 2393 (சி/15513)


## காட்டில் அல்ல வீட்டில் வைத்தே மாறன் கைதானாராம்!

சென்னை, மார்ச் 2
தமிழக 'கியூ பிராஞ்ச்' பொலீஸார் தன்னை வீட்டில் வைத்துக் கைது செய்ததாக தமிழ்த்தேச விடுதலைப் படைத் தலைவர் மாறன் நீதி மன்றத்தில் கூறிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

சிதம்பரத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த போது 'கியூ பிராஞ்ச்' பொலீஸாரால் தான் கைது செய்யப்பட்டதாகவும்—

இரண்டு நாள்கள் இருட்டறை ஒன்றில் தன்னை அடைத்து வைத்து விசாரித்த பின்னர் நீதிமன்றத்தில் தன்னைப் பொலீஸார் ஆஜர் செய்ததாகவும்—

நீதி மன்றத்தில் மாறன் கூறியுள்ளார்.

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் சகாவான மாறனை காட்டுக்குள் வைத்துக் கைது செய்ததாகக் கூறி தமிழக சிறப்பு அதிரடிப் படையினர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

ஆனால் இதனை மறுத்து மாறன் நீதி மன்றத்தில் தெரிவித்துள்ள தகவல்களால் தமிழகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

(ஒ-7)

## தேசிய ஏவுகணைத் திட்டத்தை முன்னெடுப்பதில் புஷ் உறுதி

வாஷிங்ரன், மார்ச் 2
அமெரிக்க நிலப்பரப்பை அந்நிய ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து காக்கும் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை முன்னெடுப்பதில் தனது அரசு உறுதியுடன் இருப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக நேற்று முன்தினம் காங்கிரஸ் சபையில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்ற 6 ஆயிரம் கோடி டொலர்கள் செலவாகும் என்றும் புஷ் அப்போது கூறினார்.

ரஷ்யா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவும் அமெரிக்கா தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டம் தேவையற்ற ஆயுதக் குவிப்புக்கு வழிவகுப்பதாக அவை கூறிவருகின்றன.

(ஒ-7)

# முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறார் மூப்பனார்

சென்னை, மார்ச் 2
தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான திகதிகள் எந்த வேளையிலும் அறிவிக்கப்படக் கூடிய நிலையில் அ.தி.மு.க கூட்டணியில் இணைவது குறித்த த.மா.காவின் முடிவு இழுபறி நிலையிலேயே உள்ளதாகக் கூறப்படுகிறது.

த.மா.காவுக்கு 30 இடங்களும், காங்கிரஸுக்கு 10 இடங்களும் தருவதாக முன்னர் கூறிவந்த ஜெயலலிதா காங்கிரஸுக்கு 5 இடங்கள் மட்டுமே தரமுடியும் என்றும் காங்கிரஸ் கூட்டணிக்கு வந்தாலும் வராவிட்டாலும் த.மா.காவுக்கு 30 இடங்களுக்கு மேல் கிடையாது என்றும் இப்போது கூறிவிட்டதாக அ.தி.மு.கவினர் தெரிவிக்கின்றனர்.

இதன்மூலம், த.மா.காவும் காங்கிரஸும் உதிரிக் கட்சிகளுடன் இணைந்து மூன்றாவது அணி ஒன்றை அமைக்கும் சூழ்நிலையை ஜெயலலிதா வேண்டுமென்றே உருவாக்குவதாகவும் அவர்கள் கூறினர்.

மூன்றாவது அணி அமைந்தால் தி மு க. கூட்டணிக்கே



பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கருத்து நிலவுவதாலேயே ஜெயலலிதா மூன்றாவது அணி உருவாவதில் ஆர்வம் காட்டி வருவதாகக் கருதப்படுகிறது.

ஆனால் மூன்றாவது அணி அமைக்கத் தேவையான பண பலம் த.மா.காவிடம் இல்லை அத்துடன் அதன் தலைவர் மூப்பனாரின் உடல் நிலையும் கூட்டணித் தலைவராகி அனைத்துத் தொகுதிகளுக்கும் சென்றுவர இடம் கொடுக்கவில்லை.

மூன்றாவது அணியால் குறைந்தது 3 தொகுதிகளில் கூட வெல்ல முடியாது என்ற எண்ணம் வேறு மூப்பனாரை தயங்க வைக்கிறதாகக் கூறப்படுகிறது.

தி மு. க. கூட்டணியில் சேர்ந்து விட மூப்பனார் விரும்பினாலும், பாரதீய ஜனதா இருக்கும் இடத்தில் காங்கிரஸ் சேராததால் தாய்க்கட்சியான காங்கிரஸை தனித்துவிட முடியாமல் அவர் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

## சனத்தொகை கணக்கெடுப்பு முடிவடைந்தது

புதுடில்லி, மார்ச் 2
இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் நேற்று முன்தினம் முடிவடைந்தன.

கணக்கெடுப்பைச் சரிபார்த்து ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப்பணிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## ஊழலை விட மதவாதமே மோசமானதாம்

அ. தி. மு. க. கூட்டணியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் ஊழலை விட மதவாத சக்திகளை முறியடிப்பதே முக்கியம் என்று தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் தேர்தலின் போது இதுவே தமது பரப்புரைகளில் முக்கிய அம்சமாகும் என்று அந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

அ. தி மு. க கூட்டணிக்கு தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஜெயலலிதாவிடம் இந்தியக் கம்யூனிஸ்ட்டுக்கு 20 இடங்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக்கு 19 இடங்களையும் எதிர்வரும் தேர்தலில் ஒதுக்குமாறு தனித்தனியே அந்தக் கட்சிகள் கோரியுள்ளன. (ஒ)

# பெண்ணைக் கத்தியால் குத்தி காயப்படுத்தி விட்டுக் கொள்ளை

## அரியாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்.2

வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணைக் கிறீஸ் கத்தியால் குத்திய திருடர்கள் அவர் மயக்கமுற்றதும் வீட்டினுள் இருந்த சுமார் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய காப்பு, சங்கிலி, அட்டியல் போன்ற தங்க நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

அரியாலைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் செல்வி சுப்பிரமணியம் கேசவராணி(வயது 49) என்பவரே கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

இவரது முன்வாய்ப் பகுதியில் கத்திக்குத்து விழ்ந்துள்ளது இதனால் உதடுகள் வெட்டுண்டதுடன் அண்ணாக்குப் பகுதியிலும் ஆழமான காயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் முன்வாய்ப் பற்களும் உடைந்துள்ளன. கழுத்தின் பின்பக்கத்திலும் கத்திக்குத்துக் காயம் காணப்பட்டது.

படுகாயமடைந்தவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தின் பின்னர் அந்த வீட்டில் எழுந்த முனகல் சத்தத்தைக் கேட்டு, அங்கு சென்ற அயல் வீட்டார், இரத்த வெள்ளத்தில் தலை தோய்ந்த நிலையில் கிடந்த பெண்ணை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-17-86)

## வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து

# 300 பேரின் வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்றுக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்2

வவுனியா மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 300 க்கும் அதிகமானோரின்- வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி வழக்குகள் இங்கு மாற்றப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் வழக்குகளே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தச் சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை யாழ்.மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-5-6)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம்

### மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு - இரண்டாம் அரையாண்டு
விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு - இரண்டாம் அரையாண்டு
விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு - இரண்டாம் அரையாண்டு
விஞ்ஞானத்தில் விசேட பட்டத் தேர்வு (மூன்றாம் ஆண்டு உயர்தர அலகுகள்)
விஞ்ஞானத்தில் விசேட பட்டத் தேர்வு

மேலே தரப்பட்டுள்ள பரீட்சைகள் 26-03-2001 ஆம் திகதி ஆரம்பமாகி மேற்கண்ட வரிசையில் தொடர்ந்து நடைபெறும். இப்பரீட்சைகளுக்கு மீள் பரீட்சார்த்திகளாகத் தோற்றவிருப்பவர்கள் பரீட்சை விண்ணப்பப் படிவங்களை 22-03-2001 ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பரீட்சைகள் எவ்வெப் பாடவிதான அலகுகளில் நடைபெறும் என்பன போன்ற விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் விஞ்ஞான பீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

-பதிவாளர்.

(C/15515)



## வாழ்த்துகின்றோம்

தென்னிந்தியத் திருச்சபை - யாழ் பேராயத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக திருப்பணி ஆற்றி வருகின்ற குருமார்களாகிய

1) அருள்திரு டி.ஆர்.அம்பலவாணர்.
2) அருள்திரு எஸ்.பி.ஜெயசிங்கம்.
3) அருள்திரு டி.சி.இரத்தினசிங்கம்.
4) அருள்திரு ஏ.வி.இயேசுதாசன்.
5) அருள்திரு வி.என்.தர்மகுலசிங்கம்.
6) அருள்திரு எஸ்.ஜெயநேசன்.
7) அருள்திரு ஏ.ஜெயக்குமாரன்.

இவர்களை வாழ்த்துவதில் பெருமிதமடைகின்ற குருமார்களாகிய நாம் இவர்களின் பணிக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு இறையாசியையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இவர்களைக் கௌரவிக்கும் விழா இன்று (02-03-2001) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

குருமார் ஒன்றியம்
(84807) தென்னிந்தியத் திருச்சபை - யாழ்.பேராயம்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையுடன் இணைந்து இயங்கிவரும் கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலையின் அதிபர்

**திரு.சி.இராமலிங்கம்** அவர்கள்

அதிபர் தரம் 2 - 1 ற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்; மாணவர்கள்,
(84787) யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.


## ஜேர்மன் தூதர் நாளை யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

இலங்கைக்கான ஜேர்மன் தூதர் ஜேர்ஜன் எலைஸ் ஒருநாள் விஜயமாக நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்.

நாளை காலை யாழ்.செயலகத்துக்கு வரும் அவர் அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடுவார்.

ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனம் இங்கு மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்ட பின்னர் மாலையே அவர் கொழும்பு திரும்புவார். (உ-3-10)

# குடிசன மதிப்பீடு தொடர்பாக கிராம அலுவலர்களுக்கு பயிற்சி

வலி.வடக்கு,மார்ச்2

குடிசன மதிப்பீட்டுக் கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் கிராம அலுவலர்களுக்கு இம்மாதம் முதல் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் குடிசன மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டை இலகுவாக்குவதற்கான இலக்கமிடல் போன்ற பயிற்சிகள் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதேச அலுவலர்கள் பிரிவு ரீதியாக இந்தப் பயிற்சி வகுப்புகள் கிராம அலுவலர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நடத்தப்படவுள்ளன.

கடந்த இரு தசாப்தங்களாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படாதபோதிலும் தென் பகுதியில் இப்பணி நடைபெற்றுவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க-86)

# 50 லட்சம் ரூபா செலவில் பண்ணையில் சிறைக்கட்டடம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியிலுள்ள பழைய சிறைச்சாலை உத்தியோகத்தர் விடுதி வளவில் உலக வங்கியின் உதவியுடன் 50 லட்சம் ரூபா செலவில் புதிதாகச் சிறைச்சாலைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த வளவினை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா நேற்றுச் சிறைச்சாலை அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார்.

யாழ்.சிறைச்சாலை தற்போது பிரதான வீதியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சிறைச்சாலைக்குரிய பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள், கூடுதலான கைதிகளை வைத்திருப்பதற்குரிய இட வசதிகள் போன்றவை இக்கட்டடத்தில் இல்லாத காரணத்தினால் புதிய சிறைச்சாலைக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதேவேளை உலக வங்கியின் நிதி உதவியுடன், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் ஆகியவற்றை அடக்கிய நீதிமன்றத் தொகுதிக் கட்டடம் ஒன்றும் இங்கு அமைக்கப்படவுள்ளது.

ஐந்து மாடிகளைக் கொண்ட இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதி யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள நீதிமன்ற வளவில் அமைக்கப்படவுள்ளது.

நீதிமன்றக் கட்டடத்தொகுதி மற்றும் சிறைச்சாலைக் கட்டடம் போன்றவற்றின் ஆரம்ப வேலைகளைப் பார்வையிடும் பொருட்டு ஆறு பேரடங்கிய உலகவங்கி அதிகாரிகள் குழு விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5-6)

## கட்டுடையில் கிரனேட்டுகள் மீட்பு

கொழும்பு,மார்ச்2

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில கடந்த 27 ஆம் திகதி படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது ஒன்பது கிரனேட்டுக்கள் மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று விசேட ஊடகத் தகவல நிலையம் தெரிவித்துள்ளது.

அதே தினம் கோப்பாய் தெற்குப் பகுதியில் டாங்கி எதிர்ப்புக் குண்டு ஒன்று மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டது என்றும் தகவல் நிலையம் தெரிவித்தது. (உ-3)

## செஞ்சிலுவை அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

கிட்டிணபிள்ளை அம்பலவாணர் (மாசேரி - வரணி), தம்பையா வைரமுத்து(நாவற்குழி பாடசாலை - யாழ்ப்பாணம்), சோ.கோகிலரஞ்சிதம்(நாகர்கோயில் தெற்கு), இராசையா சிறீதரன்(தம்புவத்தை-ஏழாலை மேற்கு) ஆகியோர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(உ-10)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்2

அரச சார் நிறுவனமான தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பயிற்சி நெறிகளைத் தொடர்வதற்கெனப் பயிற்சியாளர்களிடமிருந்து விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படிப் பயிற்சி நெறிகளில் இணைந்துகொள்ள விரும்புபவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமது நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-7)

## சங்கானையில் பொலீஸ் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2

சங்கானையில் நேற்று பொலீஸ் நிலையம் ஒன்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்டது.

வடபிராந்தியப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் எஸ்.நவரட்ண நேற்றுப் பகல் 11 மணிக்கு நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சங்கானை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் திவுல்வெவ, வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், மல்லாகம் மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் மற்றும் படை அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-10)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் முத்து இராதாகிருஷ்ணன் எழுதிய 'உதிர வேர்கள்' என்ற நூலின் அறிமுகவிழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறும்.

செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை நிகழ்த்துவார்.

முதற்பிரதியை குழந்தை ம.சண்முகலிங்கம் பெற்றுக்கொள்வார்.

நூல் மதிப்பீட்டுரையை மூதறிஞர் சொக்கன், வல்வை பூ. அனந்தராஜ், நல்லை அமிழ்தன் ஆகியோர் நிகழ்த்துவர். (ம)


## காணவில்லை

80 வயதுடைய திருமதி கார்த்திகேசு செல்லம்மா என்பவர் போக்கத்தை, கைதடி வடக்கு, கைதடியில் வசித்து 13.11.2000 இல் இருந்து காணாமற் போயுள்ளார். இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் இல.50/2, செட்டித்தெரு, நல்லூர் என்னும் விலாசத்துக்கு அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
(C/15517) திருமதி ச.இரவீந்திரன் (பெறாமகள்)



# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராசரத்தினம்

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று (01-03-2001) வியாழக்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31/21, சபாபதி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (84809)
தகவல்:
மனைவி.

## திருமதி சுந்தரப்பிள்ளை அண்ணாமலை

தெல்லிப்பழை - மகாதனையைச் சேர்ந்தவரும், கொழும்பில் வசித்தவருமான திருமதி சுந்தரப்பிள்ளை அண்ணாமலை புதன்கிழமை (28-02-2001) அன்று சென்னையில் காலமாகிவிட்டார்.

அன்னார் அண்ணாமலையின் அன்பு மனைவியும், பாலகிருஷ்ணன் (கொழும்பு), மோகனகிருஷ்ணன்(ஜேர்மனி), வசந்தி(கனடா), சந்தானகிருஷ்ணன்(கொழும்பு), ஆனந்தி(கொழும்பு), தமயந்தி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரட்ணம், விசாலாட்சி, இராசையா, சிவப்பிரகாசம், வைத்தீஸ்வரன், பவளக்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயந்தி, இரவீந்திரன், வசந்தகுமாரி, வினோதீஸ்வரன், இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01-03-2001) வியாழக்கிழமை சென்னையில் நடைபெற்று முடிந்தன.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.பாலகிருஷ்ணன்,
(மகன்)
*174/6,W.A.SILVA MAWATHA,*
*COLOMBO - 6*
*T.PHONE: 075 - 515796*

தகவல்:
அ.கோபாலகிருஷ்ணன்
(மைத்துனர்)
(84804)

## கதிரன் முதலி

(விடத்தற்பளை, உசன், மிருசுவில்)

மிருசுவில் விடத்தற்பளை உசனைப் பிறப்பிடமாகவும், இடம்பெயர்ந்து தற்சமயம் அச்சுவேலி தெற்கு, முத்துமாரி அம்மன் கோயிலடியில் வசித்தவருமாகிய கதிரன் முதலி நேற்று (01-03-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சிவம் (ஆசிரிய ஆலோசகர், யாழ் கல்வி வலயம்), மார்க்கண்டு ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகம்மா, மல்லிகாதேவி (மருத்துவ தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02-03-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்துமாரி அம்மன் கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு.*
*அச்சுவேலி.* (C/15516)

தகவல்:
சிவம் (மகன்),
மார்க்கண்டு (மகன்)

# தென்மராட்சியில் வீடு பார்க்க செல்வதற்குப் புதிய ஒழுங்குமுறை

## கூட்டணிக் குழு முன்வைக்கிறது

யாழ்ப்பாணம்,மார்ச்2

தென்மராட்சியில் உள்ள வீடுகளை அதன் உறவினர்கள் பார்வையிடுவதற்குச் செல்வதில் நிலவும் முறைகேடுகளை நீக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக் குழுவுக்கும் 522 ஆவது படையணி கட்டளை அதிகாரி கேணல் சில்வாவுக்கும் இடையில் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்.நகர மேயர் என்.ரவிராஜ், யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ்.அரவிந்தன் ஆகியோர் கொண்ட குழு 522 ஆவது படையணி கட்டளை அதிகாரி கேணல் சில்வாவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

தென்மராட்சியில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச் செல்லும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்றும்-

இந்த விவகாரத்தில் நிலவும் முறைகேடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - குழுவினர் கோரினர்.

வீடு பார்க்க விரும்புபவர்கள் தற்சமயம் உள்ள நடைமுறைப்படி-

கிராமசேவையாளர்,பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுகளுடன் கடிதம், வீடு அமைந்த பகுதி வரைபடம் ஆகியவற்றை கொடிகாமத்தில் உள்ள 52 ஆவது படையணி அலுவலகத்தில் கையளிக்கின்றனர் என்றும்-

எனினும் அனுமதிக்காக தினமும் மக்கள் கொடிகாமம் சென்று அலையவேண்டியுள்ளது என்றும்- குழுவினர் அவரிடம் சுட்டிக்காட்டினர்.

ஒவ்வொரு கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த சுமார் 20 பேரை ஒன்றாக - ஒரே தினத்தில் - கிராம சேவையாளரின் மேற்பார்வையில் அங்கு அழைத்துச் சென்று வர ஏற்பாடு செய்வது நல்லது என்று குழுவினர் ஆலோசனை தெரிவித்தனர்.

இந்த ஆலோசனையை கொள்கை அளவில் இராணுவ அதிகாரி ஏற்றுள்ளார் என்று குழுவினர் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து தென்மராட்சி பிரதேச செயலர் ஊடாக இந்த ஏற்பாட்டைச் செயற்படுத்த கூட்டணிப் பிரமுகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேர்தல் இங்கு 12 ஆம் திகதி

திருகோணமலை,மார்ச்2

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற் குழுவின் விசேட கூட்டம் நேற்று திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விரைவில் நடைபெறவுள்ள சங்கத்தின் நடப்பு ஆண்டுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வேட்பு மனுக்கள் திறக்கப்பட்டன.

நிதிச் செயலாளர் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்குப் போட்டியிடுவதற்குப் பலர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ததை அடுத்து புதிய உறுப்பினர்கள் தெரிவுக்காக யாழ்ப்பாணம், திருகோணமலை, வன்னி ஆகிய மாவட்டங்களில் வெவ்வேறு நாள்களில் தேர்தல்களை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும்-

இதன்படி யாழ்.மாவட்டத்துக்கான தேர்தல் எதிர்வரும் 12 ஆம் திகதியும், வன்னிப் பகுதிக்கான தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதியும், கிழக்கு மாகாணத்துக்கான தேர்தல் எதிர் வரும் 30,31 ஆம் திகதிகளில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியிலும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டதாகவும் -

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இம்முறை பொதுச் செயலாளர் பதவிக்கு சங்கத்தின் தற்போதைய தலைவர் சி.குமரகுருதாசனும், தற்போதைய செயலாளர் தமகாசிவமும் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (உ-7)

## இரு மீனவர்கள் இன்று விடுவிப்பு

வவுனியா, மார்ச்.2

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள இரு சிங்கள மீனவர்கள் இன்று விடுதலை செய்யப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மல்லாவியில் வைத்து இவ்விரு மீனவர்களும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் இன்று காலை ஒப்படைக்கப்படவிருக்கின்றனர் என்றும்-

அங்கிருந்து அழைத்து வரப்படும் மீனவர்கள் வவுனியாவில் வைத்துத் தம்மிடம் கையளிக்கப்படவிருப்பதாகவும் -

பின்னர் அவர்களை உறவினர்களிடம் கையளிக்கும் நடவடிக்கையைத் தாங்கள் மேற்கொள்ள இருப்பதாகவும் -

வவுனியா விகாராதிபதி சியம்பல கஸ்வெவ விமலசாகர தேரர் தெரிவித்தார். (உ-3)

## சந்திரபுர ஸ்கந்தா மாணவருக்கு!

யாழ்ப்பாணம், மார்ச்2

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களையும் ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு வருமாறு வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ(உயர்தர) வகுப்பு மாணவர்களைத் தமது கணிப்பீட்டு அறிக்கையுடன் வரவேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (உ-3)

## நூல் இரவல் பணி

வலிகாமம் தெற்கு,மார்ச்2

உடுவில் மத்திய சனசமூக நிலையத்தினர் தமது அங்கத்தவர்களுக்கு புத்தகங்களை இரவல் கொடுக்கும் பணியை ஆரம்பித்துள்ளனர். (க-152)

## இலட்ஷார்ச்சனை பூர்த்தி விழா

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் இலட்ஷார்ச்சனைப் பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (க-10)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மக்களுக்குள்ள விருப்பத்தை - ஆவலை - தெரியப்படுத்த விரும்புகிறோம்.

இதற்காக கண்டி வீதி வழியே யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வருவதற்கு எங்களை அனுமதிக்குமாறு வேண்டுகிறோம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் ஊடாக சுமுகமாகப் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகளைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் செய்வதற்கும் ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம்.

இந்தப் பாதயாத்திரைக்கு உதவும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோருகின்றோம் - இப்படி அந்தக் கடிதத்தில் தி.மகேஸ்வரன் எம்பி. தெரிவித்துள்ளார்.(உ-3-7)

# பிரிட்டனின் நடவடிக்கை துரதிர்ஷ்டவசமானது!

## மன்னார் ஆயர் கவலை

கொழும்பு,மார்ச்2

பிரிட்டனில் தடை செய்யப்படும் பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாக விடுதலைப்புலிகள் இயக்கம் சிபாரிசு செய்யப்பட்டமை ஒரு துரதிர்ஷ்டவசமான செயலே.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப். அவர் இது குறித்து மேலும் கருத்து தெரிவிக்கையில்-

பிரிட்டனின் இந்தச் செயல் தேவையற்ற ஒரு நடவடிக்கையாகும்.

பிரிட்டிஷ் அரசின் அறிவிப்பு எமக்குப் பெருங்கவலை தருவதாக உள்ளது. இலங்கையின் சமாதானத்துக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளையும் இந்தத் தடை பற்றிய அறிவிப்பு கேள்விக்குரியதாக்கிவிட்டது - என்றார். (உ-7)

# பகிர்ந்து வாழத் தயாரா?

*"என் தந்தையிடமிருந்து ஆசிபெற்றவர்களே! வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்."*

*இன்று இந்த வார்த்தை விடுக்கும் அழைப்பு காத்திரமான ஒன்றாகும். விண்ணரசை சுதந்தரித்துக் கொள்ளப்போவோர் யார் என்ற கேள்வி எம் மத்தியில் எழுகிறது. இதற்குரிய விடையை கிறிஸ்துவே மலைப் பொழிவில் எமக்குத் தந்துள்ளார்.*

### இன்று 3 ஆம் நாள்

பாடுபடாமல் பட்டம் இல்லை என்பார்கள். உலகம் தோன்றுவதற்கு முதல் எங்களுக்காக தயார் செய்யப்பட்ட ஆட்சியுரிமையில் பங்கேற்பதற்கு நாம தகுதியுள்ளவர்களாக எங்களை ஆக்கிக் கொள்ளாவிட்டால் அதில் நாம் பங்கேற்க முடியாது. அந்தத் தகுதியை எவ்வாறு நாம் பெறுவது என்பது தான் இன்று எம்முன் நிற்கும் கேள்வி. விண்ணரசின் பொருட்டு நாம் எங்களை ஏழையராக்கிக் கொள்ளும் போதுதான் அத்தகுதியைப் பெறுகின்றோம். பணக்காரன் விண்ணரசை அடையத் தான் செய்ய வேண்டியது என்னவென யேசுவிடம் கேட்டபோது "உனக்குள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு என்னைப் பின்செல்" என்றார்.

*அங்கே விண்ணரசுக்கான தியாகத்தை யேசு அவனிடம் கேட்டு நிற்கிறார். இங்கு எமக்கும் அதே அழைப்புத்தான் விடுக்கப்படுகிறது. கிறிஸ்துவின் அந்த ஆட்சியுரிமையில் பங்குபெற நாமும் தியாகங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். எம்மோடு பல ஏழைகள் இங்கு வாழ்கின்றார்கள். அவர்களோடு எமக்குள்ளதைப் பகிர்ந்து கொள்ள ஆயத்தமாக இருக்கிறோமா? எம்மிடம் அந்த ஏழ்மையான உள்ளம் இருக்கிறதா? சின்னஞ்சிறிய ஒருவனுக்கு செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் "என் பொருட்டு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவன் கைமாறு பெறாமல் போகான்".*

**தவக்காலச் சிந்தனை**

*எனவே நாமும் எம்மத்தியிலுள்ள ஏழைகளை அன்பு செய்வோம். எமது உள்ளத்தையும் ஏழ்மையாக்கி எளியவர்க்கு இடமளிப்போம். பகிர்ந்து வாழ்தல் மூலம் பரமனின் இறை ஆட்சியில் பங்குகொள்வோம்.*

**- ர.ஜெயராணி.**

கைகொடுத்தல் நிதி
எம் மண்ணின் அவலங்களை சித்தரிக்கும்
தே.தேவானந்தின்.
உயிர் விசை
(நாடக ஆற்றுகை)
இடம்: ராஜலக்ஷ்மி திரையரங்கு, நெல்லியடி.
காலம்:03-03-2001 சனிக்கிழமை.
காலை 10.30,மாலை 2.30 (புதிய நேரம்)
கைகொடுத்தல்:- 50/=, 100/=
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.
ஸ்ரீ கிருஷ்ணா கூல் பார் & மணப்பந்தல் சேவை
கொடிகாம வீதி, நெல்லியடி.

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம்.
A/L - 2003
பொது இரசாயனம்
Mr.மகேஸ்வரன்
ஆரம்பம்:- நாளை (03-03-2001) சனி
காலை 10.00 மணி.
சனி, ஞாயிறு 10.00 மணி
(84779)

கருத்தரங்கு
விடயம் :-சமநிலைத் தேசிய வருமானம்
வழங்குபவர்:-V.P.சிவநாதன் (பொருளியற்துறைத் தலைவர்)
இடம்:-கைலாசபதி கலையரங்கு
காலம்:-இன்று (02-03-2001) வெள்ளிக்கிழமை
நேரம்:- பி.ப 3.00 மணி (புதிய நேரம்)
எமது மன்றத்தினால் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் அனைத்து க.பொ.த உயர்தர மாணவர்களையும், ஆர்வலர்களையும் கலந்து பயன்பெற வேண்டுகிறோம்.
நன்றி
குறிப்பு:- தேசிய வருமானம் பற்றிய குறிப்புகள் (Hand Out) உடன் விற்பனையாகும்.
இளம் பொருளியலாளர் மன்றம்
யாழ்.பல்கலைக்கழகம்.
(84762)

கணக்கீடு
A/L 2002
பங்குடைமை
பிரிவு I சனி, ஞாயிறு 1.15 p.m.
ஆரம்பம்:- 03-03-2K1
பிரிவு II திங்கள், செவ்வாய் 4.00 p.m
ஆரம்பம்:- 05-03-2K1
BY:- "யாழ்.புகழ்"
கலைச்செல்வன்
(84664)
கலைக் கல்லூரி,யாழ்.நகர்.
(மனோகராச் சந்தி அருகில்)


சகல விதமான
வாகனங்களையும்
குறைந்த செலவில்
சிறந்த முறையில்
சேவிஸ்
செய்து கொள்ள
யூனியன் சேவிஸ்
ஸ்ரேசன்
இருபாலைச் சந்தி.
- (84734)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.
B.A., B.COM. PART I
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம்:- 03-03-2001
சனி 6.30 am
(84738)

நாளை ஆரம்பம்!
A/L 2001
கருத்தரங்கும் வினாப்பத்திர வகுப்பும்
காலை - 7 மணி
கணக்கீடு
D.SAM
(C/15459)
DMI
யாழ்நகர்

கணனி வன்பொருளில்
(COMPUTER HARDWARE)
பயிற்சி பெற்றோருக்கு வேலைவாய்ப்பு
கணனி வன்பொருளில் அடிப்படை அறிவு கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம். மேலதிக பயிற்சியும் கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.
- நற்சான்று வழங்கக்கூடிய இருவரின் பெயர்களுடன் விண்ணப்பிக்கவும். வன்பொருளில் பயிற்சி அறிவு உள்ளோருக்கு முன்னுரிமையும் உரிய வேதனமும் வழங்கப்படும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
விளம்பர இல: 1228
மே/பா 'உதயன்'
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.